வெளியீடு : 24-12-2020 Issued: 24-12-2020

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
**(பதினைந்தாவது பேரவை)**

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
**(FIFTEENTH ASSEMBLY)**

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 14, 2020—தொகுதி 71—எண் 1**

**Friday the 14th February 2020—Volume 71—No. 1**

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.**
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

**விலை ரூ.3.00]** **[Price Rs.3.00**

**14–2–2020**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| *ஆளுநரும் அமைச்சரவையும்* | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| *பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்* | xv-xix |
| *பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)* | xxi-xxxii |
| **வரவு-செலவுத் திட்டம், 2020-2021, அளித்தல்—** | 1-89 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 1-89 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பன்வாரிலால் புரோகித்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**2. துணை முதலமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**3. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**

வனம்

| | | | |
|---|---|---|---|
| 4. | **பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**<br>*பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை* |
| 5. | **கூட்டுறவுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:**<br>*கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்* |
| 6. | **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**<br>*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்* |
| 7. | **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**<br>*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்* |
| 8. | **மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**<br>*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)* |

**9. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்*

**10. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

**11. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**13. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*

**14. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

| | | |
|---|---|---|
| **15.** | **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**<br>*கைத்தறி மற்றும் துணிநூல்* |
| **16.** | **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**<br>*கால்நடை பராமரிப்பு* |
| **17.** | **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**<br>*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்* |
| **18.** | **வேளாண்மைத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**<br>*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு* |
| **19.** | **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**<br>*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்* |
| **20.** | **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**<br>*வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம்* |

**21. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

**23. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*

**24. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:**

*குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்*

**25. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**

*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்*

**26. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

| | | |
|---|---|---|
| **27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்* |
| **28. தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்* |
| **29. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்* |
| **30. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள்* |
| **31. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்* |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | | |
|---|---|---|---|
| **1.** | **Chief Minister** | .. | **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**<br>Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports |
| **2.** | **Deputy Chief Minister** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| **3.** | **Minister for Forests** | .. | **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**<br>Forests |
| **4.** | **Minister for School Education, Youth Welfare and Sports Development** | .. | **The Hon. Thiru K.A. Sengottaiyan:**<br>School Education, Youth Welfare and Sports Development Department |

| | | | |
|---|---|---|---|
| **5.** | **Minister for Co-operation** | .. | **The Hon. Thiru Sellur K. Raju:**<br>Co-operation, Statistics and Ex-Servicemen Welfare |
| **6.** | **Minister for Electricity, Prohibition & Excise** | .. | **The Hon. Thiru P. Thangamani:**<br>Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act |
| **7.** | **Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme** | .. | **The Hon. Thiru S.P. Velumani:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme |
| **8.** | **Minister for Fisheries and Personnel & Administrative Reforms** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training) |
| **9.** | **Minister for Law, Courts & Prisons** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:**<br>Law, Courts and Prisons, Mines & Minerals |
| **10.** | **Minister for Higher Education** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |

| | | | |
|---|---|---|---|
| 11. | **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Dr. V. Saroja:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme |
| 12. | **Minister for Industries** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Industries, Steel Control and Special Initiatives |
| 13. | **Minister for Environment** | .. | **The Hon. Thiru K.C. Karuppannan:**<br>Environment and Pollution Control |
| 14. | **Minister for Food & Civil Supplies** | .. | **The Hon. Thiru R. Kamaraj:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 15. | **Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Thiru O.S. Manian:**<br>Handlooms & Textiles |
| 16. | **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:**<br>Animal Husbandry |
| 17. | **Minister for Health & Family Welfare** | .. | **The Hon. Dr. C. Vijaya Baskar:**<br>Health, Medical Education and Family Welfare |

| | | | |
|---|---|---|---|
| **18.** | **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Doraikkannu:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| **19.** | **Minister for Information & Publicity** | .. | **The Hon. Thiru Kadambur Raju:**<br>Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press |
| **20.** | **Minister for Revenue and Disaster Management & Information Technology** | .. | **The Hon. Thiru R.B. Udhayakumar:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies, Disaster Management and Information Technology |
| **21.** | **Minister for Tourism** | .. | **The Hon. Thiru Vellamandi N. Natarajan:**<br>Tourism, Tourism Development Corporation |
| **22.** | **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru K.C. Veeramani:**<br>Commercial Taxes, Registration and Stamp Act |
| **23.** | **Minister for Milk & Dairy Development** | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**<br>Milk and Dairy Development |

| | | | |
|---|---|---|---|
| 24. | **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries |
| 25. | **Minister for Labour** | .. | **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board |
| 26. | **Minister for Transport** | .. | **The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 27. | **Minister for Adi Dravidar & Tribal Welfare** | .. | **The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. | **Minister for Tamil Official Language & Tamil Culture** | .. | **The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology |
| 29. | **Minister for Khadi & Village Industries Board** | .. | **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan |
| 30. | **Minister for Hindu Religious & Charitable Endowments** | .. | **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments |
| 31. | **Minister for Backward Classes & Minorities Welfare** | .. | **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. பி.எம். நரசிம்மன்*

*திரு. எஸ்.பி. சண்முகநாதன்*

*திரு. சு. ரவி*

*திரு. இரா. குமரகுரு*

*திரு. சு. குணசேகரன்*

*திரு. வி.வி. இராஜன் செல்லப்பா*

## செயலாளர்

*திரு. கி. சீனிவாசன்*

---

# *7-1-2020 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. | .. சிறப்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல். | .. மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை) |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். | .. மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை) |
| திரு. செ. பாண்டியன், எம்,ஏ., எம்.பில்.,எம்.எல். | .. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை) |

| | |
|---|---|
| திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. | .. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை) |
| திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | |
|---|---|
| திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி. | .. குழு அலுவலர் |
| திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) |
| திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல். | .. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) |
| திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட். | .. தலைமை நிருபர் |
| திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அம்பேத்குமார், திரு. எஸ். | .. வந்தவாசி (செ.வ.) |
| 2. | அம்மன் கே. அர்ச்சுணன், திரு. | .. கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | அரசு, டாக்டர் ஆர்.டி. | .. செய்யூர் (செ.வ.) |
| 4. | அரவிந்த் ரமேஷ், திரு. எஸ். | .. சோழிங்கநல்லூர் |
| 5. | அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி. | .. கோயம்புத்தூர் வடக்கு |
| 6. | அலெக்சாண்டர், திரு. வீ. | .. அம்பத்தூர் |
| 7. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 8. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 9. | அன்பழகன், திரு. க. | .. கும்பகோணம் |
| 10. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 11. | அன்பழகன், திரு. ஜெ. | .. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| 12. | அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. | .. திருவெறும்பூர் |
| 13. | ஆடலரசன், திரு. ப. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ. | .. நத்தம் |
| 15. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. கவுண்டம்பாளையம் |
| 16. | ஆறுமுகம், திரு. பா. | .. கந்தர்வகோட்டை (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 17. | ஆஸ்டின், திரு. எஸ். | .. கன்னியாகுமரி |
| 18. | இதயவர்மன், திரு. L. | .. திருப்போரூர் |
| 19. | இரத்தினசபாபதி, திரு. ஏ. | .. அறந்தாங்கி |
| 20. | இரவிச்சந்திரன், திரு. கே.எஸ். | .. எழும்பூர் (செ.வ.) |
| 21. | இராமசாமி, திரு. கரி. | .. காரைக்குடி |
| 22. | இராமச்சந்திரன், திரு. ஆர்.டி. | .. குன்னம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. எம். | .. ஒரத்தநாடு |
| 24. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. அருப்புக்கோட்டை |
| 25. | இராமலிங்கம், திரு. கே.வி. | .. ஈரோடு மேற்கு |
| 26. | இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. | .. மதுரை வடக்கு |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | .. தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. இரா. | .. சேலம் வடக்கு |
| 29. | இராஜேந்திரன், திரு. சி.வி. | .. பர்கூர் |
| 30. | இன்பசேகரன், திரு. பி.என்.பி. | .. பெண்ணாகரம் |
| 31. | இன்பதுரை, திரு. ஐ.எஸ். | .. ராதாபுரம் |
| 32. | ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். | .. ஆற்காடு |
| 33. | ஈஸ்வரன், திரு. எஸ். | .. பவானிசாகர் (செ.வ.) |
| 34. | உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. | .. உடுமலைப்பேட்டை |
| 35. | உதயகுமார், திரு. ஆர்.பி. | .. திருமங்கலம் |
| 36. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 37. | எடப்பாடி கே. பழனிசாமி, திரு. | .. எடப்பாடி |

| | | |
|---|---|---|
| 38. | எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. | .. காஞ்சிபுரம் |
| 39. | கடம்பூர் ராஜு, திரு. | .. கோவில்பட்டி |
| 40. | கணேசன், திரு. வெ. | .. திட்டக்குடி (செ.வ.) |
| 41. | கணேஷ், திரு. ஆர். | .. உதகமண்டலம் |
| 42. | கந்தசாமி, திரு. ப. | .. சூலூர் |
| 43. | கருணாநிதி, திரு. இ. | .. பல்லாவரம் |
| 44. | கருணாஸ், திரு. சே. | .. திருவாடனை |
| 45. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 46. | கலைச்செல்வன், திரு. V.T. | .. விருத்தாசலம் |
| 47. | கஸ்தூரி வாசு, திருமதி வி. | .. வால்பாறை (செ.வ.) |
| 48. | காத்தவராயன், திரு. S. | .. குடியாத்தம் (செ.வ.) |
| 49. | காந்தி, திரு. ஆர். | .. ராணிப்பேட்டை |
| 50. | காமராஜ், திரு. இரா. | .. நன்னிலம் |
| 51. | கார்த்திகேயன், திரு. க. | .. ரிஷிவந்தியம் |
| 52. | கார்த்திகேயன், திரு. ப. | .. வேலூர் |
| 53. | கார்த்திக், திரு. நா. | .. சிங்காநல்லூர் |
| 54. | காளிமுத்து, திரு. வி.எஸ். | .. தாராபுரம் (செ.வ.) |
| 55. | கிரி, திரு. மு.பெ. | .. செங்கம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணசாமி, திரு. ஆ. | .. பூந்தமல்லி (செ.வ.) |
| 57. | கீதா, திருமதி ம. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 58. | கீதா ஜீவன், திருமதி பி. | .. தூத்துக்குடி |
| 59. | குணசேகரன், திரு. சு. | .. திருப்பூர் தெற்கு |

| | | |
|---|---|---|
| 60. | குமரகுரு, திரு. இரா. | .. உளுந்தூர்பேட்டை |
| 61. | கோவிந்தசாமி, திரு. ஆ. | .. பாப்பிரெட்டிப்பட்டி |
| 62. | கோவிந்தராசு, திரு. மா. | .. பேராவூரணி |
| 63. | சக்கரபாணி, திரு. அர. | .. ஒட்டன்சத்திரம் |
| 64. | சக்திவேல், திரு. எ.பி. | .. சேலம் தெற்கு |
| 65. | சக்ரபாணி, திரு. மு. | .. வானூர் (செ.வ.) |
| 66. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. ஸ்ரீவைகுண்டம் |
| 67. | சண்முகம், திரு. அ. | .. கிணத்துக்கடவு |
| 68. | சண்முகம், திரு. சி.வி. | .. விழுப்புரம் |
| 69. | சண்முகையா, திரு. செ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 70. | சதன் பிரபாகர், திரு. நி. | .. பரமக்குடி (செ.வ.) |
| 71. | சத்திய நாராயணன், திரு. ப. | .. தியாகராய நகர் |
| 72. | சத்யா, திருமதி ப. | .. பண்ருட்டி |
| 73. | சத்யா, திரு. S.A. | .. ஓசூர் |
| 74. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 75. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 76. | சந்திரசேகர், திரு. இரா. | .. மணப்பாறை |
| 77. | சந்திரபிரபா, திருமதி மு. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. எம்.சி. | .. கடலூர் |
| 79. | சம்பத்குமார், திரு. வே. | .. அரூர் (செ.வ.) |
| 80. | சம்பத்து, திரு. கோ. | .. சோளிங்கர் |

| | | |
|---|---|---|
| 81. | சரவணக்குமார், திரு. க.சு. | .. பெரியகுளம் (செ.வ.) |
| 82. | சரவணன், திரு. எஸ்.எஸ். | .. மதுரை தெற்கு |
| 83. | சரவணன், டாக்டர் ப. | .. திருப்பரங்குன்றம் |
| 84. | சரஸ்வதி, திருமதி பொன். | .. திருச்செங்கோடு |
| 85. | சரோஜா, டாக்டர் வி. | .. ராசிபுரம் (செ.வ.) |
| 86. | சாமி, திரு. கே.பி.பி. | .. திருவொற்றியூர் |
| 87. | சித்ரா, திருமதி கு. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 88. | சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. | .. திரு.வி.க. நகர் (செ.வ.) |
| 89. | சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. | .. மொடக்குறிச்சி |
| 90. | சின்னதம்பி, திரு. ஆர்.எம். | .. ஆத்தூர் (செ.வ.) |
| 91. | சின்னப்பன், திரு. P. | .. விளாத்திகுளம் |
| 92. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 93. | சீத்தாபதி, திருமதி பெ. | .. திண்டிவனம் (செ.வ.) |
| 94. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 95. | சுதர்சனம், திரு. எஸ். | .. மாதவரம் |
| 96. | சுந்தர், திரு. க. | .. உத்திரமேரூர் |
| 97. | சுப்பிரமணியன், திரு. மா. | .. சைதாப்பேட்டை |
| 98. | சுப்ரமணி, திரு. பெ. | .. தருமபுரி |
| 99. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. நாகர்கோவில் |
| 100. | செங்குட்டுவன், திரு. டி. | .. கிருஷ்ணகிரி |
| 101. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. கோபிச்செட்டிபாளையம் |
| 102. | செந்தில்குமார், திரு. ஐ.பி. | .. பழனி |

| | | |
|---|---|---|
| 103. | செந்தில் பாலாஜி, திரு. V. | .. அரவக்குறிச்சி |
| 104. | செம்மலை, திரு. S. | .. மேட்டூர் |
| 105. | செல்லூர் கா. ராஜு, திரு. | .. மதுரை மேற்கு |
| 106. | செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். | .. தென்காசி |
| 107. | செல்வம், திரு. கு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 108. | செல்வராசு, திரு. எம். | .. முசிறி |
| 109. | செழியன், முனைவர் கோவி. | .. திருவிடைமருதூர் (செ.வ.) |
| 110. | சேகரன், திரு. கே.வி. | .. போளூர் |
| 111. | சேகர், திரு. C.V. | .. பட்டுக்கோட்டை |
| 112. | சேகர், திரு. R.D. | .. பெரம்பூர் |
| 113. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. துறைமுகம் |
| 114. | சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 115. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 116. | தங்கப்பாண்டியன், திரு. சௌ. | .. ராஜபாளையம் |
| 117. | தங்கமணி, திரு. பி. | .. குமாரபாளையம் |
| 118. | தங்கம் தென்னரசு, திரு. | .. திருச்சுழி |
| 119. | தமிமுன் அன்சாரி, திரு. எம். | .. நாகப்பட்டினம் |
| 120. | தமிழ்ச்செல்வன், திரு. ரா. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 121. | தனபால், திரு. ப. | .. அவினாசி (செ.வ.) |
| 122. | தனியரசு, திரு. உ. | .. காங்கேயம் |
| 123. | திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. | .. திண்டுக்கல் |

| | | |
|---|---|---|
| 124. | திராவிடமணி, திரு. மு. | .. கூடலூர் (செ.வ.) |
| 125. | தினகரன், திரு. டிடிவி | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 126. | துரை. கி. சரவணன், திரு. | .. புவனகிரி |
| 127. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. பாபநாசம் |
| 128. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 129. | தூசி கே. மோகன், திரு. | .. செய்யாறு |
| 130. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. ஈரோடு கிழக்கு |
| 131. | தேன்மொழி, திருமதி எஸ். | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 132. | நடராஜன், திரு. அ. | .. பல்லடம் |
| 133. | நடராஜ், திரு. ஆர். | .. மயிலாப்பூர் |
| 134. | நந்தகுமார், திரு. ஏ.பி. | .. அணைக்கட்டு |
| 135. | நரசிம்மன், திரு. பி.எம். | .. திருத்தணி |
| 136. | நல்லதம்பி, திரு. அ. | .. திருப்பத்தூர் |
| 137. | நாகராஜன், திரு. எஸ். | .. மானாமதுரை (செ.வ.) |
| 138. | நாராயணன், திரு. வெ. | .. நாங்குநேரி |
| 139. | நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) | .. வாணியம்பாடி |
| 140. | நீதிபதி, திரு. பா. | .. உசிலம்பட்டி |
| 141. | நீலமேகம், திரு. டி.கே.ஜி. | .. தஞ்சாவூர் |
| 142. | நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி மேற்கு |

143. பரமசிவம், டாக்டர் V.P.B. .. வேடசந்தூர்

144. பரமேஸ்வரி, திருமதி மு. .. மணச்சநல்லூர்

145. பலராமன், திரு. ப. .. பொன்னேரி (செ.வ.)

146. பவுன்ராஜ், திரு. எஸ். .. பூம்புகார்

147. பழனி, திரு. கே. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை மத்தி

149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

150. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

151. பன்னீர்செல்வம், திரு. வி. .. கலசப்பாக்கம்

152. பாண்டி, திரு. ச. .. முதுகுளத்தூர்

153. பாண்டியராஜன், திரு. க. .. ஆவடி

154. பாண்டியன், திரு. கே.ஏ. .. சிதம்பரம்

155. பாரதி, திரு. பி.வி. .. சீர்காழி (செ.வ.)

156. பாஸ்கரன், திரு. க. .. சிவகங்கை

157. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

158. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்

159. பிரகாஷ், திரு. ஒய். .. தளி

160. பிரபு, திரு. அ. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)

161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

162. புகழேந்தி, திரு. சு. .. மதுராந்தகம் (செ.வ.)

163. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்

164. பூண்டி கி. கலைவாணன், திரு. .. திருவாரூர்

165. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

166. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

167. பெரியண்ணன் அரசு, திரு. .. புதுக்கோட்டை

168. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்

169. பென்ஜமின், திரு. பா. .. மதுரவாயல்

170. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி

171. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்

172. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி

173. மணிகண்டன், டாக்டர் எம். .. இராமநாதபுரம்

174. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

175. மதிவாணன், திரு. உ. .. கீழ்வேளூர் (செ.வ.)

176. மருதமுத்து, திரு. அ. .. கெங்கவல்லி (செ.வ.)

177. மனோகரன், திரு. அ. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

178. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்

179. மனோரஞ்சிதம், திருமதி நா. .. ஊத்தங்கரை (செ.வ.)

180. மனோன்மணி, திருமதி ப. .. வீரபாண்டி

181. மஸ்தான், திரு. கே.எஸ். .. செஞ்சி

182. மாசிலாமணி, டாக்டர் இரா. .. மயிலம்

183. மாணிக்கம், திரு. கி. .. சோழவந்தான் (செ.வ.)

184. முத்தமிழ்செல்வன், திரு. ர. .. விக்கிரவாண்டி

185. முருகன், திரு. பி. .. வேப்பனஹள்ளி

186. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

187. முருகையா பாண்டியன், திரு. ஆர். .. அம்பாசமுத்திரம்

188. முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். .. கடையநல்லூர்

189. மூர்த்தி, திரு. கே.எஸ். .. பரமத்தி-வேலூர்

190. மூர்த்தி, திரு. பி. .. மதுரை கிழக்கு

191. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி

192. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

193. மோகன், திரு. எம்.கே. .. அண்ணா நகர்

194. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்

195. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்

196. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

197. ராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி

198. ராதாகிருஷ்ணன், திரு. வி. .. மயிலாடுதுறை

199. ராமர், திரு. எ. .. குளித்தலை

200. ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என். .. ஜெயங்கொண்டம்

201. ராமு, திரு. அ. .. குன்னூர்

202. ராஜலெட்சுமி, திருமதி வி.எம். .. சங்கரன்கோவில் (செ.வ.)

203. ராஜவர்மன், திரு. M.S.R. .. சாத்தூர்

204. ராஜா, திரு. சி. .. சங்கரி

205. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

| | |
|---|---|
| *206.* ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர். | .. அந்தியூர் |
| *207.* ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. | .. சிவகாசி |
| *208.* ராஜேந்திரன், திரு. சு. | .. அரியலூர் |
| *209.* ராஜேந்திரன், திரு. வி.ஜி. | .. திருவள்ளூர் |
| *210.* ராஜேஷ் குமார், திரு. செ. | .. கிள்ளியூர் |
| *211.* லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ். | .. திருநெல்வேலி |
| *212.* லோகநாதன், திரு. கோ. | .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.) |
| *213.* வரலட்சுமி, திருமதி ம. | .. செங்கல்பட்டு |
| *214.* வளர்மதி, திருமதி சீ. | .. ஸ்ரீரங்கம் |
| *215.* வாகை சந்திரசேகர், திரு. | .. வேளச்சேரி |
| *216.* விருகை V.N. ரவி, திரு. | .. விருகம்பாக்கம் |
| *217.* வில்வநாதன், திரு. அ.செ. | .. ஆம்பூர் |
| *218.* விஜயகுமார், திரு. க.நா. | .. திருப்பூர் வடக்கு |
| *219.* விஜயதரணி, திருமதி எஸ். | .. விளவங்கோடு |
| *220.* விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். | .. கரூர் |
| *221.* விஜய பாஸ்கர், டாக்டர் சி. | .. விராலிமலை |
| *222.* விஜியகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| *223.* வீரமணி, திரு. கே.சி. | .. ஜோலார்பேட்டை |
| *224.* வெங்கடாச்சலம், திரு. என்.டி. | .. பெருந்துறை |
| *225.* வெங்கடாஜலம், திரு. கோ. | .. சேலம் மேற்கு |
| *226.* வெல்லமண்டி ந. நடராஜன், திரு. | .. திருச்சிராப்பள்ளி கிழக்கு |

*227.* வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

*228.* வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

*229.* வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

*230.* ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்

*231.* ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

*232.* ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. .. மடத்துக்குளம்

*233.* ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

*234.* ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (செ.வ.)

*235.* நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விகாரி, மாசி 2, திருவள்ளுவர் ஆண்டு 2051

## 2020 பிப்ரவரி 14, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு."*

*பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.*

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## வரவு—செலவுத் திட்டம், 2020–2021, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளியோருக்கு அன்புப் பெட்டகம், எதிரிகளுக்கோ சிம்ம சொப்பனம், ஊழல் கறை படியா உண்மைத் தத்துவம், உழைப்பின் பெருமையுரைத்த அறிவின் வித்தகம், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) தவமாய்த் தவமிருந்து தமிழன்னை பெற்றெடுத்த தவப் புதல்வி, தமிழர் நலம் காக்க, தனிச் சுடராய் வந்துதித்த யுகத் தலைவி, தமிழகத்தை தனதாக்கி, தமிழர்களை வசமாக்கி, இதயங்களை ஆட்சி செய்யும்*

பெண்ணரசி, இமயமென வெற்றி கொண்ட பேரரசி, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை"*

பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்கி செயலாற்ற வல்லவரே, செயல் திறன் படைத்தவர் என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாகி, நிதி ஆதாரங்களை வெகுவாகப் பெருக்கி, அனைத்து துறைகளுக்கும் அதனை ஒதுக்கித் தந்து, நாடு வளம் பெறச் செய்து, எதிர்வந்த இன்னல்களையும் இடையூறுகளையும் பொடிப்பொடியாக்கி, துடைத்து தூரத் தள்ளி, மக்கள் நலன் ஒன்றே மனதில் கொண்டு செயலாற்றி தமிழ்க்குடியை மேலும் மேலும் முன்னேற்றவும், தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக நிலைநிறுத்திடவும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், *(மேசையைத் தட்டும் ஒலி)* தனது வாழ்க்கை முழுவதையும் தமிழக மக்களுக்கே ஈந்து, அரும்பாடுபட்டு, பெரும் பெருமையைப் பெற்றார்கள். "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னும் இலட்சிய முழக்கத்தோடு மக்களுக்குத் தொண்டு செய்வதே தனது வாழ்நாள் கடமை எனக் கொண்டு இரவு பகல் பாராமல், ஓய்வென்பதே இன்றி செயலாற்றி, தமிழக மக்களின் இதயங்களில் என்றும் நீங்கா இடம் பிடித்த, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் உழைப்பிலும், தியாகத்திலும் பூத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசை, *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையேற்று சிறப்பாக தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏழையரிடம் அன்பு செலுத்தி, எளியவர்க்கு ஆதரவு காட்டி, தாய்க்குலத்திற்குப் பெருமை தந்து, மகளிர் அதிகாரம் பெற்றிட வழி வகுத்து, தமிழக மக்கள் அனைவரும் நலமே காண தினம் உழைத்து, அவர்தம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்று, மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித்

தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் விண்ணின்று எங்களை வாழ்த்தி, வழி நடத்திட வேண்டும் என வேண்டி, 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இப்பேரவை முன் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

தாய்த் தமிழ்நாட்டை எவ்வாறெல்லாம் உயர்த்த வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் கனவு கண்டாரோ, அந்த விருப்பங்களையெல்லாம் நிறைவேற்ற, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தணியாத சாதனை தாகத்துடன் கடமையாற்றி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசத் தொண்டர்களாகிய நாங்கள், அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையினைத் தொடர்ந்து பின்பற்றுவதுடன் ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்கிற அவரது கொள்கையினை முன்னெடுத்துச் சென்று, தமிழ்நாட்டு மக்கள் நல் ஆளுமையின் பலன்களை முழுமையாக அடைவதற்கு அயராது பாடுபட்டு வருகிறோம்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், மூன்றாண்டுகளுக்கு முன்னர் நம்மை விட்டு நீங்கியபோது, நாம் அனைவரும் திக்கற்றவர்களாக உணர்ந்தோம். எனினும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மையான தாயுள்ளம், நாங்கள் செல்ல வேண்டிய பாதையை வகுத்துக் காட்டியுள்ளதுடன், மக்கள் பணியாற்றும் விடாமுயற்சியில் தளராத உறுதியையும், மக்கள் சேவையைத் தொடர்வதற்கான ஆற்றலையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் அளித்துச் சென்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பின்னர், இந்த அரசின் ஆட்சி நீடிக்காது, ஆட்சி மாறிவிடும் என்றெல்லாம் சிலர் கூறி வந்தனர். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவர்தம் நல்லாசிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மிகத் திறமையுடன் செயல்பட்டுவரும் அம்மாவின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து விமர்சகர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களின் கருத்துகளைப் பொடிப்பொடியாக்கி தொடர்ந்து நல்லாட்சி புரிந்து வருவது மட்டுமல்லாமல், மென்மேலும் வலுவடைந்து, மக்கள் நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்று, பீடுநடை போட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உள்நாடு மட்டுமல்லாமல், உலகெங்கிலும் இருந்தும் பாராட்டுகள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

குவியும்வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் செயல்பாடுகள் மிளிர்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆட்சிக்கான, நல் ஆளுமை விருதினை (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு பெற்றுள்ளதுடன், இந்தியா டுடே பத்திரிகையால் 'தொடர்ந்து இரண்டாண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற மாநிலம்' எனவும் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தமிழ்நாட்டை தொடர்ந்து அமைதிப் பூங்காவாக விளங்கச் செய்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிலையான, கணிக்கத்தக்க, அனைவருக்கும் இசைவான கொள்கைகளுடன் நாங்கள் பணியாற்றி வருகிறோம். அனைவரும் எளிதில் அணுகி, முறையீடுகள், ஆலோசனைகள் மற்றும் உண்மையான குறைகளுக்கு நியாயமான மற்றும் விரைவான பதில்கள் கிடைக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயலாற்றி வருகிறது. நாங்கள் மக்களின் கோரிக்கைகளைக் கேட்டு அதற்கு உடனடியாகத் தீர்வு வழங்கி வருகின்றோம். நாங்கள் சமூகத்தில் உள்ள மிக ஏழ்மை நிலையில் உள்ளவர்களையும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியவர்களின் குறைகளையும் போக்கி வருகின்றோம். அறிஞர்களின் மதிநுட்ப ஆலோசனைகளுக்கு செவி சாய்த்து, அவர்களின் அறிவுரைகளின்பேரில் நாங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் ஆய்ந்த அறிவுடன் நாங்கள் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம். பல பன்னாட்டு நிதி நிறுவனங்களும், முதலீட்டாளர்களும் முதலீடு செய்ய மிகவும் விரும்புகின்ற மாநிலமாக தமிழ்நாடு இன்றைக்கு விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் அமைதியாக வாழ்வதற்கும், அவர்களின் இலட்சியங்களை அடைவதற்கும், எளிதில் அரசினை அணுகி, அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை சிறப்பாக உருவாக்கியுள்ளோம்.

முற்பகல் 10–10

நம் மாநிலத்தில், சட்டம்-ஒழுங்கை தொடர்ந்து திறம்பட நிலைநாட்டி, மக்கள் பாதுகாப்பு உணர்வுடன் நல்வாழ்வு வாழ்வதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து உறுதி செய்யும். தொடர்ச்சியாகப் பெறப்படும் முதலீடுகளும், சிறப்பான பொருளாதார நடவடிக்கைகளும், மக்களுக்கு மேன்மேலும் வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் உருவாக்கித் தரும்.

ஏழை, எளியோர், நலிவுற்றோர் மற்றும் அடித்தட்டு மக்கள் பாதுகாக்கப்படுவதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் உறுதிசெய்யும். 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்,இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அடங்கியுள்ளன.

இன்றைய உலக மற்றும் தேசியப் பொருளாதாரச் சூழலில் வீசும் எதிர்காற்றை தமிழ்நாடும் எதிர்கொண்டு வருகிறது. அனைத்திந்திய அளவில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான கணிக்கப்பட்ட வளர்ச்சி மதிப்பீடுகள் குறைக்கப்பட்டு, தற்போது, 2019-2020 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்திய வளர்ச்சி நிலையான விலைகளின் அடிப்படையில் 5 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இத்தகைய பொருளாதார நெருக்கடிகளையும் திறமையாக நம்முடைய தமிழ்நாடு சமாளித்துள்ளது. மாநிலத்தின் பன்முகப் பொருளாதாரம், மாநில அரசின் நிலையான கொள்கை, ஆக்கத்திறன் வாய்ந்த முயற்சிகள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, நமது மக்களின் அயராத உழைப்பு போன்ற காரணிகள், 2018-2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 8.17 விழுக்காட்டை அடைவதை உறுதி செய்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2019-2020 ஆம் ஆண்டில், 7.27 விழுக்காடு என்று மதிப்பிடப்பட்ட வளர்ச்சி விகிதமானது, அனைத்திந்திய அளவில் கணிக்கப்பட்ட 5 விழுக்காட்டைக் காட்டிலும் அதிகமானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் ஆண்டில், மேலும் வலுவான பொருளாதார வளர்ச்சியை நாங்கள் மிகவும் எதிர்பார்க்கிறோம்.

பதினைந்தாவது நிதிக் குழுவின் 2020-2021 ஆம் ஆண்டிற்கான முதலாவது அறிக்கையையும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறிப்பையும் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒன்றாம் நாள் அன்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. 2021-2022 ஆம் ஆண்டு முதல் 2025-2026 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலத்திற்கான இறுதி அறிக்கையினை, நிதிக் குழு இந்த ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வரிகளில் மாநில அரசுகளுக்கான நிதிப் பகிர்வை 42 சதவீதத்திலிருந்து 41 சதவீதமாகக் குறைக்குமாறு நிதிக் குழு பரிந்துரை செய்துள்ளது. இரண்டு யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட ஜம்மு-

காஷ்மீர் மாநிலத்திற்கு, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாயிலிருந்து இனி பங்கு அளிக்கப்படாது என்பதைக் கருத்தில் கொண்டால், மொத்த நிதிப் பகிர்வில் பரிந்துரைக்கப்பட்டுள்ள குறைப்பினால், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாயில் பெரும் பாதிப்பு இருக்காது. மாநிலங்களுக்கு இடையேயான நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்திலிருந்து 4.189 சதவீதமாக, சிறிய அளவே உயர்ந்துள்ளது. கடந்த சில நிதிக் குழுக்களின் பரிந்துரைகளால் தமிழ்நாட்டின் பங்கு தொடர்ந்து குறைந்து வந்த போக்கு, இந்த உயர்வினால் மாற்றம் அடைந்துள்ளது. ஆனாலும், கடந்தகால அநீதிகளுக்கு, அதிலும் குறிப்பாக பதினான்காவது நிதிக் குழு இழைத்த பாதிப்புகளுக்கு இது முழுமையான பரிகாரமாகாது. எனவே, தமிழ்நாடு போன்ற சிறப்பாக நிருவகிக்கப்படும் மாநிலத்திற்கு சரியான கணக்கீடுகள்மூலம், போதிய நிதிப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நமது கோரிக்கையை நாம் பதினைந்தாவது நிதிக் குழுவின் முன்பு தொடர்ந்து மீண்டும் வலியுறுத்துவோம்.

நிதிப் பகிர்விற்குப் பின்னரும் மாநில அரசு வருவாய்ப் பற்றாக்குறையையே சந்திக்கும் என்ற தமிழ்நாடு அரசின் வாதத்தை ஏற்றுக்கொண்ட பதினைந்தாவது நிதிக் குழு, தமிழ்நாட்டிற்கு வருவாய்ப் பற்றாக்குறை மானியமாக 4,025 கோடி ரூபாய் வழங்க பரிந்துரை செய்துள்ளது. மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மக்கள் நலச் செலவினங்களை, இவ்வறிக்கை ஏற்றுக்கொண்டதையே இது குறிக்கும். எனினும், மத்திய அரசின் ‘நடவடிக்கை அறிக்கையில்’, நிதிப் பகிர்விற்குப் பின்னரான வருவாய்ப் பற்றாக்குறை மானியம் வழங்குவது தொடர்பான நிதிக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதற்கென மொத்தமாக, 74,340 கோடி ரூபாயை நிதிக் குழு பரிந்துரைத்துள்ள நிலையில், மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் இம்மானியத்திற்காக 30,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மானியத் தொகையை முழுமையாகப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில், மத்திய அரசு போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வலியுறுத்தும்.

*முற்பகல் 10-15*

2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள், இனிவருங்காலங்களில்

*பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்கு ஈடு செய்தல்) சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் மேல்வரி தொகையின் அளவிற்கு மட்டுமே, மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்யும் நிதியத்திற்கு, நிதி மாற்றம் செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். 101–வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 2016–ன்படி பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்கு ஈடு செய்தல்) சட்டம், 2017 இயற்றப்பட்டது. அதன்படி, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தியதிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டினை ஈடு செய்ய மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'அரசியலமைப்பில் ஈடு செய்வதற்கான உறுதியான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டால்தான் தமிழ்நாடு அரசு பொருட்கள் மற்றும் சேவைகள் வரியினை அமல்படுத்துவதற்கு தனது ஆதரவினை வழங்கும்' என்று தெளிவுபட தெரிவித்திருந்தார். எனவே, இழப்பீடு வழங்குவதற்கான வருவாயினை பெருக்குவதற்கான உரிய வழிவகைகளை கண்டறிவது மத்திய அரசின் கடமையாகும். அத்துடன் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டினை எக்காரணம் கொண்டும் குறைக்கக் கூடாது. அக்டோபர் 2019–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளார். எனவே, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில், இதுகுறித்து விவாதித்து உரிய தீர்வினை எட்ட வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம்.*

**தமிழ் வளர்ச்சி**

*தமிழ்மொழி மற்றும் தமிழர் பண்பாட்டின் பெருமையை கொண்டாடி உலகறிய செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதிபூண்டுள்ளது. இதற்காக, ஹார்வர்டு பல்கலைக்கழகம், ஹூஸ்டன் பல்கலைக்கழகம், வாரணாசி இந்து பல்கலைக்கழகம் மற்றும் கௌஹாத்தி பல்கலைக்கழகம் உட்பட, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில், தமிழ்மொழி கற்பித்தலைக் கொண்டுவர சீரிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில் சிகாகோ மாநகரில் நடைபெற்ற பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, பாரிஸ் நகரில் நடைபெற்ற நான்காவது ஐரோப்பிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு ஆகியவற்றிற்கு மாண்புமிகு*

அம்மா அவர்களின் அரசு நிதியுதவி அளித்துள்ளது. ஒரு கோடி ரூபாய் மானியத்தில், தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் பெயரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கண ஆய்வு இருக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிறுவ உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தமிழ் வளர்ச்சித் துறைக்காக 74.08 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கீழடி அகழ்வாராய்ச்சியின் முடிவுகள், தமிழர் நாகரிகத்தின் தொன்மையை அறிந்துகொள்வதில் பொதுமக்களின் ஆர்வத்தை மிகவும் அதிகரித்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக, உலகத்தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட 12.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். பண்டைய காலத்து தமிழர் நாகரிகத்தைப் பற்றி மேலும் அறிவதற்காக, கூடுதலாக நான்கு தொகுப்புகளில் தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்வதற்கு, மாநில தொல்லியல் துறை, இந்திய தொல்லியல் துறையின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் தொல்லியல் துறைக்காக 31.93 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகள்**

ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ள நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள்-2030, மத்திய அரசாலும், மாநில அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 17 இலக்குகள் மற்றும் 169 குறிப்பிட்ட இலக்குகள், மாநிலத்தில் வளர்ச்சி ஏற்படுத்தும் கட்டமைப்பாக அமையும். அவற்றில் 19 இலக்குகள் 2020 ஆம் ஆண்டிற்குள்ளும், இரண்டு இலக்குகள் 2025 ஆம் ஆண்டிற்குள்ளும் இதர இலக்குகள் 2030 ஆம் ஆண்டிற்குள்ளும் எட்டப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக உள்ளது. 2020 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய இலக்குகளை எய்துவதற்காக செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த இலக்குகளை எட்டுவதை உறுதி செய்வதற்கு, தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களை அனைத்துத் துறைகளும் வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைத்து

வருகின்றன. தேவைக்கேற்ப புதிய திட்டங்களும் உத்திகளும் வகுக்கப்படும். 2019 ஆம் ஆண்டு நித்தி ஆயோக் (NITI Aayog) வெளியிட்ட, இந்தியாவிற்கான நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள் குறியீட்டில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. வளர்ச்சி இலக்குகள் எய்தப்படுவதைக் கண்காணிப்பதற்கான வலைதள அமைப்பு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் தேதியன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலத்தின் சாதனைகளை துல்லியமாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் மத்திய அரசிற்கு தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளால், இலக்குகளை அடைவதற்கான தரவரிசையில் தமிழ்நாடு முன்னேற்றம் பெறும் என நாம் நம்புகிறோம்.

*முற்பகல் 10-20*

**நிருவாகம்**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி, நிருவாகத் தரத்தையும், சேவை வழங்கல் திறனையும் உயர்த்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முழுக்கவனம் செலுத்தி வருகிறது. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் நாளன்று மத்திய அரசு வெளியிட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், ஒட்டுமொத்தத் தரவரிசையில், நாட்டில் உள்ள 18 பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றது (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் நிருவாகத்திற்குக் கிடைத்த அங்கீகாரமாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'இந்தியா டுடே' பத்திரிக்கை நவம்பர் 2019-ல் 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்விலும் 'ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை, மொத்தம் 715 அறிவிப்புகள் வரவு-செலவுத் திட்டங்களில் இடம்பெற்றிருந்தன. இவற்றில், 537 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 161 அறிவிப்புகளுக்குத் தேவையான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டு

பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 17 அறிவிப்புகளின்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதாரங்களின் அடிப்படையிலான அணுகுமுறையில் வறுமை ஒழிப்பிற்கான கொள்கையை வகுக்கவும், வறுமை ஒழிப்புத் திட்டங்களின்கீழ் அதிகப் பயன்களை வழங்கவும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் தேதியன்று இந்தப் பேரவையில் அறிவித்தபடி, தெற்கு ஆசியாவின் ஜெ-பால் (J-PAL) மையத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாளன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தானபோது, ஜெ-பால் மையத்தின் நிறுவன இயக்குநரான பேராசிரியர் எஸ்தர் டஃப்லோ உடன் நானும் இருந்தேன். பேராசிரியர் எஸ்தர் டஃப்லோ மற்றும் அவரின் கணவர் மற்றும் சக நிறுவன இயக்குநரான, பேராசிரியர் அபிஜித் பானர்ஜி ஆகிய இருவருக்கும், 2019 ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது பெருமைக்குரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஜெ-பால் மையத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து பணியாற்றுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இரு தரப்பும் பயனடையக்கூடிய இந்த ஒத்துழைப்பு, தங்களின் மிக விரிவான கூட்டமைப்பு எனவும், உலகின் பிற நாடுகளிலும் பின்பற்ற இயலும் தனித்துவமான முன்மாதிரி அமைப்பு எனவும் அம்மையம் தெரிவித்துள்ளது. இதுவரை, அம்மையம், ஒன்பது துறைகளில் 15 ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அவற்றில், 10 ஆய்வுகள் நிறைவுற்றுள்ளன. வறுமை ஒழிப்பில் சரியான கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்கு, அம்மையத்துடனான ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, கூடுதலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**வருவாய் நிருவாகம்**

அரசு நிருவாகத்தை மக்களிடம் மேலும் நெருக்கமாகக் கொண்டு செல்வதற்கு, 2019 ஆம் ஆண்டில் மட்டும், முன்னெப்போதும் இல்லாத அளவில் 5 புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு முதல் 16 புதிய

வருவாய்க் கோட்டங்களையும், 92 புதிய வருவாய் வட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தோற்றுவித்துள்ளது. புதிய மாவட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு, ஆண்டு ஒன்றிற்கு 59.73 கோடி ரூபாய் தொடர் செலவினத்தில் 835 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய மாவட்டங்களில், 550 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகங்களை அமைப்பதற்கான இடங்களைக் கண்டறிவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐந்து இலட்சம் கூடுதல் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், ஓய்வூதியம் பெறத் தகுதியுடையமொத்த நபர்களின்எண்ணிக்கை 34.47 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதுவரையில், 1.73 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கு 4,315.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

நில ஆவணங்களை மக்கள் தாமதமின்றிப் பெறுவதை உறுதிசெய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இணையவழி பட்டா மாறுதல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. எனினும், நில உட்பிரிவு செய்ய வேண்டிய இனங்களில், நில அளவைப் பணிகள் அதிக அளவில் நிலுவையாக உள்ள காரணத்தால், பட்டா மாறுதல் செய்வதில் நிலுவை ஏற்பட்டுள்ளது. எனவே, நில அளவைத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட, உரிமம் பெற்ற நில அளவர்களை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதி அளித்துள்ளது. இப்புதிய நில அளவர்களின் முதல் அணிக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன், நில அளவை தொடர்பான சில பணிகளை மேற்கொள்வதற்கு கிராம நிருவாக அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கி மறுபயிற்சியும் அளிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது.

இதனால், பட்டா மாறுதல் வழங்கக் கோரும் மனுக்களுக்கு மிக விரைவில் தீர்வுகாண வகை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை, மொத்தமாக 24,10,107 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், வீடில்லாத ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகளை வரன்முறை செய்வதற்கான சிறப்புத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆகஸ்டு மாதம் 2019-ல் சீரமைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் மக்களில் தகுதியானவர்களுக்கு, அரசு நிலங்களில் அல்லது தனியாரிடமிருந்து கையகப்படுத்திய நிலங்களில் மாற்று வீட்டுமனை வழங்கப்படும். ஊரக வளர்ச்சித் துறை கிராமப்புறப் பகுதிகளில் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நகர்ப்புறங்களில் செயல்படுத்திவரும் வீட்டு வசதித் திட்டங்களின்கீழ், அத்தகைய தகுதிவாய்ந்த நபர்களுக்கு இலவச வீட்டு வசதி வழங்கப்படும். இதுவரை, ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் வசித்துவந்த 1,28,463 குடும்பங்களுள், 35,470 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடும்பங்களுக்கும் வரும் ஆகஸ்டு மாதத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்ததன்படி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (LIC) இணைந்து, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படவுள்ள, 'புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான' விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இயற்கை மரணங்களில், தற்போது வழங்கப்படும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கான இழப்பீட்டுத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளில், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கான

*இழப்பீட்டுத் தொகை நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். விபத்தினால் நிரந்தர ஊனமுற்றோருக்கு உதவித்தொகை இரண்டு இலட்சம் ரூபாய் வரையும் கணிசமாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டம், விரைவில் அறிமுகப்படுத்தப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம், பயன்பெற முடியாத நபர்களுக்காக, தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் விபத்து நிவாரணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உழவர் பாதுகாப்புத் திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 200.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

**பேரிடர் மேலாண்மை**

*இந்த ஆண்டில், தமிழ்நாட்டில் இதுவரை எந்த ஒரு பேரிடரும் நிகழவில்லை. எனவே, இந்தக் காலத்தை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது. 4,399 எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு உடனடித் தீர்வுகாணும் வகையில், வெவ்வேறு துறைகளின் அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் முன்கூட்டியே எச்சரிக்கும் வகையில், சென்னை கடலோர வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு தேசியக் கடலோர ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது முடியும் தருவாயில் உள்ள கடலோர பேரிடர் குறைப்புத் திட்டத்தின் அடுத்தக் கட்ட திட்டமாக, பெருநகர சென்னையில், விரிவான வெள்ள பேரிடர் தணிப்பு திட்டத்தினை 3,000 கோடி ரூபாய் மொத்தச் செலவில் செயல்படுத்திட உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் தமிழ்நாடு அரசு முன்மொழிந்துள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பேரிடர் மேலாண்மைக்காக 1,360.11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

முற்பகல் 10-30

தேசிய மற்றும் மாநிலப் பேரிடர் நிவாரணம் மற்றும் மேலாண்மை நிதியங்களின் அளவை கணிசமாக உயர்த்த பதினைந்தாவது நிதிக் குழு பரிந்துரை செய்துள்ளது. 825 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டிற்கான நிதியத்தின் அளவு, 1,360 கோடி ரூபாயாக 65 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டபோதிலும், தமிழ்நாட்டிற்கான மாநில பேரிடர் நிவாரண நிதியம் உயர்த்தப்பட்ட அளவு, 18 பெரிய மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட சராசரி உயர்வைவிடக் குறைவாகவே உள்ளது. மேலும், கடந்த காலச் செலவினங்களை ஒப்பிடும்போது, அதற்கு ஏற்ற உயர்வு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மாநிலத்திற்கான நிதியத்தில், மாநில அரசுகளின் பங்கான 25 சதவீதத்தை 10 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்ற நமது கோரிக்கையை நிதிக் குழு ஏற்கவில்லை. சென்னை மாநகரில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு 100 கோடி ரூபாய் மானியம் பதினைந்தாவது நிதிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**சட்டம்—ஒழுங்கு**

பொருளாதார வளர்ச்சியையும், மக்கள் நல்வாழ்வினையும் பேணுவதற்காக, சட்டம்-ஒழுங்கை திறம்படக் கையாள்வது முக்கியமானதாகும். மாநிலக் காவல் படை தனது பணிகளை திறம்பட மேற்கொள்வதை உறுதி செய்ய, போதுமான காவலர்கள், தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை காவல் துறை பெறுவதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்துள்ளது. காவல் துறையிலுள்ள காலிப் பணியிடங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டு, தற்போது 1.13 இலட்சம் காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் வாயிலாக, மொத்தம் 10,242 காவல் துறைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2020-2021 ஆம் ஆண்டில் மேலும், 10,276 சீருடைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர்.

குற்றங்களையும், குற்றவாளிகளையும் கண்காணிக்கும் கணினி வலையமைப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, இந்த அமைப்பு முறை, 54.84 கோடி ரூபாய் செலவில் மேலும் தரம் உயர்த்தப்பட்டு பொதுமக்கள் எளிதில் பயன்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. அப்பாவிப்

பொதுமக்கள் இணையவழிக் குற்றங்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்கவும், இணையப் பாதுகாப்பை அதிகரிக்கவும், 28.97 கோடி ரூபாய் செலவில் இணையதள குற்றத் தடுப்புக் காவல் பிரிவு வலுப்படுத்தப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்காக 431 கோடி ரூபாயும், காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக 100 கோடி ரூபாயும் உட்பட, மொத்தமாக 8,876.57 கோடி ரூபாய் காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

தீயணைப்பு மற்றும் பிற பேரிடர் நிவாரணப் பணிகளில் துரித தீர்வு அளிக்க வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்ந்து, தேவையான இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களை அவ்வப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கி வந்ததால், மாநிலம் முழுவதும் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களின் எண்ணிக்கை இப்பொழுது 346 ஆக உள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 18.22 கோடி ரூபாய் செலவில் 16 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உயர் அடுக்குமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை நவீன முறையில் தடுக்கும் மற்றும் மீட்புப் பணிகளில் உதவும் 104 மீட்டர் தீயணைப்பு ஏணிகள் உட்பட நவீன தீயணைப்பு மீட்புக் கருவிகள் வாங்குவதற்காக 13.67 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பதினைந்தாவது நிதிக் குழு தேசியப் பேரிடர் நிவாரண மற்றும் மேலாண்மை நிதியத்தில், தீயணைப்புப் பணிகள் நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கத்திற்காக 1,000 கோடி ரூபாயை பரிந்துரைத்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்மொழிவுகளை அனுப்பும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 405.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகள், மனிதநேயத்திற்கும், சீர்திருத்த அணுகுமுறைக்கும் நற்பெயர் பெற்றவை. சீர்திருத்த முயற்சியின் ஒரு பகுதியாக, சிறைவாசிகள் சிறைத் தொழிற்கூடங்களில் ஈட்டும் ஊதியத்தில் அவர்களின் பராமரிப்புக்காகப் பிடித்தம் செய்யும் தொகை 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, ஊதியத்தில் அவர்களின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

உயர்த்தப்படும். ஒரு புதிய தொடக்க முயற்சியாக, சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக, புழல், வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள சிறைகளின் வெளி வளாகங்களிலும், புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் 5 பெட்ரோல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், மேலும் 6 பெட்ரோல் நிலையங்கள் அமைக்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டில் சிறைத் துறைக்கு 392.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-35*

**சாலைப் பாதுகாப்பு**

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் படுகாயங்களை பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது, 2020 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகளில் ஒன்றாகும். 2018 ஆம் ஆண்டில் சிறப்பான சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான விருதை, மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டில் சாலை விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 38.87 சதவீதம் குறைந்துள்ளது. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை திட்டம் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை திட்டம், சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்ட பிறகு, அவசர சிகிச்சை பிரிவில் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8.3 சதவீதத்திலிருந்து 2.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அணுக வசதியாக அமைந்துள்ள 80 அரசு மருத்துவமனைகள், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. சாலைப் பாதுகாப்பில் தமிழ்நாட்டின் ஆக்கத்திறனை மேலும் மேம்படுத்துவதற்கும், தவிர்க்கக்கூடிய உயிரிழப்புகள் மற்றும் படுகாயங்களைக் குறைப்பதற்கும், தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு இயக்கத்தினை (Tamil Nadu Road Safety Mission) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உருவாக்கும். இந்த இயக்கம், பல்வேறு துறைகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து, 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு (Road Accident-free Tamil Nadu)' என்ற இலக்கை அடைவதற்காக, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இத்திட்டத்தின்கீழ்,

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விபத்துகளை பொறியியல் சார்ந்த தீர்வு நடவடிக்கைகள்மூலம் சரி செய்தல், ஓட்டுநர் கல்வி, சட்ட அமலாக்கம், விபத்திற்குப் பிந்தைய உயிரிழப்புகளைத் தடுத்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும். நெடுஞ்சாலைகள், நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, காவல், போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டங்களை ஒருங்கிணைத்து, சாலைப் பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீடு 500 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். சாலை வடிவமைப்பில் சாலைப் பாதுகாப்பு அம்சங்களும் உள்ளடங்கியிருப்பதை உறுதி செய்வதற்கு, மாநில அரசின் நெடுஞ்சாலைத் துறையில் சாலைப் பாதுகாப்பிற்கான தனியானதொரு பிரிவு உருவாக்கப்படும். சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் சாலைப் பாதுகாப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**நீதி நிருவாகம்**

சிறந்த நீதி நிருவாகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 494 புதிய நீதிமன்றங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அமைத்துள்ளது. குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் குற்றங்களை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென 16 சிறப்பு போக்சோ (POCSO) நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 1,317.04 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகள் உட்பட பிற உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் புதிய கட்டடங்களின் கட்டுமானத்திற்காக 112.92 கோடி ரூபாய் உட்பட, நீதி நிருவாகத்திற்கென 1,403.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு**

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2023 தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தை வெளியிட்டிருந்தார். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ல் பட்டியலிடப்பட்ட பல திட்டங்கள், செயலாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே நாம் திட்டப் பட்டியலைத் தயார் செய்து வைத்திருந்ததால், சமீபத்தில் இந்திய அரசால்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

அறிவிக்கப்பட்ட தேசிய உட்கட்டமைப்பு பட்டியலில் (NIP) தமிழகத்திற்கு பயனளிக்கும் பல திட்டங்களை அதில் சேர்ப்பதற்கு உடனடியாகத் தெரிவிக்க முடிந்தது. அதன்படி, தமிழ்நாட்டின் 8.58 இலட்சம் கோடி ரூபாய் மொத்தச் செலவிலான 179 திட்டங்கள் மத்திய அரசின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. மத்திய அரசு இத்திட்டங்கள் முழுமை பெறுவதற்கு உதவியளிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம். விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்காக, திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து இதுவரை 278.11 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதன்மூலம், வெவ்வேறு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியைப் பெறவும், இந்திய அரசிடமிருந்து நிதியுதவியை வாங்குவதற்கு ஏதுவாக நம்மால் உடனடியாக திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடிகின்றது. தமிழ்நாடு, பெரிய உட்கட்டமைப்புத் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய திறனையும், ஆயத்த நிலையையும் கொண்டுள்ளதை நிதி நிறுவனங்கள் பாராட்டியுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்கீழ், திட்ட தயாரிப்பு நிதிக்கென 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

தமிழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தனியார் நிதி நிறுவனங்களின் முதலீடுகளையும் நாம் ஈர்க்கும் நிலையில் உள்ளோம். தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியம், தமிழ்நாடு உறைவிட நிதியம்-பகுதி-II மற்றும் தமிழ்நாடு உயிரித் தொழில்நுட்ப துணிகர முதலீடு நிதியம் (Tamil Nadu Biotechnology Venture Capital Fund) ஆகியவற்றை நிருவகித்து வருகிறது. மத்தியக் கிழக்கு நாடுகள், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருக்கும், ஓய்வூதிய மற்றும் அரசு நிதியங்கள் உள்ளிட்ட, முதலீட்டாளர்களிடமிருந்தும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தின் நிதி திரட்டும் முயற்சிகள் நல்ல பலன் பெறும் நிலையில் உள்ளன. எட்டு பெரிய திட்டங்கள், முதலீட்டுக்கான தயார் நிலையில் உள்ளன. 2020-2021 ஆம் ஆண்டில், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம், திட்டங்களில் 2,000 கோடி ரூபாயை முதலீடு செய்வதற்குத் தயாராக உள்ளது.

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**வேளாண்மை**

தமிழ்நாட்டிலுள்ள மக்கள்தொகையில் 50 விழுக்காடு மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களுக்கு விவசாயமே முதன்மையான வாழ்வாதாரமாக இருந்துவருகிறது. விவசாயியை மையமாகக் கொண்ட அணுகுமுறையை பின்பற்றுவதே கிராமப்புற மக்களின் இல்லாமையை போக்குவதற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான வழியாகும். வேளாண்மைத் துறையில் முதலீடு செய்வதென்பது உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் இன்றியமையாததாகும். காவேரி டெல்டா பகுதியினை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவித்தது, தமிழக அரசு வேளாண்மைத் துறைக்கு அளித்துவரும் பெரும் முக்கியத்துவத்தையே குறிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீரை சிக்கனமாக பயன்படுத்தும் திருந்திய நெல் சாகுபடி முறையானது (System of Rice Intensification) 2020-2021 ஆம் ஆண்டில் 27.18 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும். 11.1 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு நேரடி நெல் விதைப்பு முறை, நாகப்பட்டினம், திருவாரூர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகியவற்றில் அதிக விளைச்சல் தரும் இரகங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

நிலையான கரும்பு உற்பத்திக்கு 2020-2021 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் செலவில் 74,132 ஏக்கர் பரப்பளவில், நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டத்தின் தொழில்நுட்பங்களுடன் புதிய இரகங்கள் அறிமுகப்படுத்தப்படும். கரும்பு விவசாயிகள் நுண்ணீர்ப் பாசனத்தை மேற்கொள்வதை ஊக்குவிக்க, 2019-2020 ஆம் ஆண்டில் 68.35 கோடி ரூபாய் சிறப்பு கூடுதல் நிதியுதவி அனுமதிக்கப்பட்டது. இத்திட்டமானது 75 கோடி ரூபாய் கூடுதல் நிதியுதவியுடன் 2020-2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மாநில அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த பரிந்துரை விலைக்கும் (SAP), மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கும் (FRP) இடையேயான வேறுபாட்டினைச் சரிசெய்ய, கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கரும்பு உற்பத்திக்கான

உற்பத்தி ஊக்கத்தொகை, 2019-2020 ஆம் ஆண்டின் அரவைப் பருவத்திலும் தொடர்ந்து வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக 2020-2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 165 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டின் அரவைக் காலத்திற்கு டன் ஒன்றிற்கு 100 ரூபாய் வரை என்ற அளவில் 110 கோடி ரூபாயை போக்குவரத்து மானியமாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும். இத்தகைய நடவடிக்கைகள், தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தித் தொழில் புத்துயிர் பெற உதவும் என நாங்கள் நம்புகிறோம்.

சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த பண்ணைய முறை, தற்போது 28 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, 2020-2021 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. கூட்டுப்பண்ணைய முறையின் தொடர் முயற்சியாக, சிறு மற்றும் குறு விவசாயிகள், உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டதன் விளைவாக, கடந்த ஆண்டுகளில் ஆறு இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். ஏற்கெனவே 75 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது, 45 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அறிவித்தவாறு, அரசு, தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புக் கொள்கை'யினை வெளியிட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100.56 கோடி ரூபாயில் நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 10-45

2016-2017 ஆம் ஆண்டிலிருந்து 2019-2020 ஆம் ஆண்டு வரையில், 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள், நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை இயக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி இயக்கத்தை, நிலத் தொகுப்பு அடிப்படையில் மறுசீரமைப்பு செய்வதன்மூலம், ஒவ்வொன்றும் 250 ஏக்கர் கொண்ட 10,000 நிலத் தொகுப்புகள், எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் 'தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வளர்ச்சி இயக்கத்தின்'கீழ் மேம்படுத்தப்படும். 2020-2021 ஆம் ஆண்டில், 180 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்ட 3,000 நிலத் தொகுப்புகள் பயனடையும்.

புவி வெப்பமயமாதல் காரணமாக, சமீபகாலங்களில் அடிக்கடி பூச்சித் தாக்குதல்கள் ஏற்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 47.66 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்பட்ட சீரிய முயற்சிகளால் தமிழ்நாட்டில் அமெரிக்கன் படைப்புழுத் தாக்குதல் திறம்பட கட்டுப்படுத்தப்பட்டது. அமெரிக்க படைப்புழுத் தாக்குதலுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பாக ஐந்து கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, 2020-2021 ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாயில் பூச்சி மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நடப்பு ரபி பருவத்தில், நெற்பயிரில் ஆனைக் கொம்பன் ஈ மற்றும் புகையான் பூச்சித் தாக்குதலும், தென்னையில் 'ரூகோஸ் சுழல் வெள்ளை ஈ' தாக்குதலும் உடனடியாகக் கண்டறியப்பட்டு, அவற்றின் பரவுதலைக் தடுக்கவும், தேவை ஏற்படின், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் துறையில் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்த, குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் வலுப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரி வருகின்றனர். ஏற்கெனவே உள்ள அலுவலர்களைத் தக்க முறையில் பயன்படுத்தி, வேளாண் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள், துறை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெறுவதற்கு, 'உழவர்-அலுவலர் தொடர்புத் திட்டத்தை' அரசு அறிமுகம் செய்யும். வேளாண் துறை அதிகாரிகள் விளைநிலங்களுக்கே சென்று விவசாயிகளைச் சந்தித்து ஆலோசனைகளை வழங்குவதுடன், தகவல் தொழில்நுட்ப உத்திகளும் இதன்பொருட்டு பயன்படுத்தப்படும்.

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு, மகத்தான வெற்றி கண்டு வருகிறது. இதுவரையில், இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தில் 36.44 இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 7,618 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. காப்பீட்டுக் கட்டணத் தொகையில் மாநில அரசின் பங்குத் தொகைக்காக, 724.14 கோடி ரூபாய் என்ற உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுடன், 2020-2021 ஆம் ஆண்டிலும் தமிழ்நாட்டில் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

நுண்ணீர்ப் பாசனத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு கடந்த 2 ஆண்டுகளாக முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

(மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2018–2019 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 700.69 கோடி ரூபாய் செலவில் 3.51 இலட்சம் ஏக்கர் நிலம் நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. 2019–2020 ஆம் ஆண்டில் 5.63 இலட்சம் ஏக்கர் நிலங்கள் 1,370.24 கோடி ரூபாய் செலவில் நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றன. வரும் 2020–2021 ஆம் ஆண்டில் 1,844.97 கோடி ரூபாய் செலவில் 7.41 இலட்சம் ஏக்கர் நிலங்கள் நுண்ணீர்ப் பாசன வசதி பெறும்.

பயன்தரும் தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவிப்பது விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், மாறிவரும் ஊட்டச்சத்துத் தேவைகளை எதிர்கொள்ளவும் வகை செய்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதற்கான சிறப்பு மையங்களை அமைக்க 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கடலூரில் முந்திரி, பெரம்பலூரில் வெங்காயம், தேனியில் முருங்கை, ஈரோட்டில் மஞ்சள், தென்காசியில் எலுமிச்சை மற்றும் தூத்துக்குடியில் மிளகாய் ஆகியவற்றிற்கான மையங்கள் அமைக்க உள்ளது. தோட்டக்கலைப் பயிர் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க, 2020–2021 ஆம் ஆண்டில், 325 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தொழிலாளர் பற்றாக்குறையை சரிசெய்வதற்கும், பண்ணைச் செயல்பாடுகளை எளிமையாக்குவதற்கும் வேளாண் இயந்திரமயமாக்கலுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது மாநிலத்தில், 1,665 வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும், 997 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களும், 15 கரும்பிற்கான வேளாண் இயந்திர வாடகை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2020–2021 ஆம் ஆண்டில், மொத்த நிதியொதுக்கீடான, 200 கோடி ரூபாய் மதிப்பில் 100 வட்டார அளவிலான மற்றும் 250 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்படும்.

முற்பகல் 10–50

பிரதம மந்திரியின் கிஸான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகா அபியான் திட்டம், 10 குதிரைத் திறன் வரை கொண்ட 17,500 தனித்தியங்கும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை தமிழ்நாட்டில் அமைப்பதற்கு மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அனுமதி அளித்துள்ளது. இந்த தனித்தியங்கும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை 70 சதவீதம் மானியத்துடன்

வேளாண் பொறியியல் துறை அமைத்து தரும். வேளாண்மைக்கான மின் இணைப்பிற்கு விண்ணப்பித்து காத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு 472.85 கோடி ரூபாய் ஆகும். இதில், தமிழ்நாடு அரசின் பங்கு தொகைக்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 208.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் 77.94 கோடி ரூபாய் செலவில் 53.36 ஏக்கர் பரப்பளவில் மெகா உணவுப் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில், பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) திட்டத்தின்கீழ், 218 கோடி ரூபாய் செலவில், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் மேலும் 8 வேளாண் பதப்படுத்தும் மண்டலங்கள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தருமபுரி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தென்காசி மாவட்டங்களில் உணவுப் பூங்காக்கள் 70 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும். ஒருங்கிணைந்த உழவர் விற்பனை வளாகங்கள் திருவண்ணாமலை, தருமபுரி, மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 5 இடங்களில் முன்னோடித் திட்ட அடிப்படையில் மொத்தம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு-வேளாண் சந்தை உட்கட்டமைப்பு நிதியின்கீழ் நிறுவப்படும். இந்த வளாகங்கள் இடுபொருள் விற்பனையகங்கள், சேவை மையங்கள் மற்றும் பிற விற்பனை நிலையங்கள் போன்ற வசதிகளுடன், விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இருதரப்பினரும் பயன்பெறும் வகையில், பொதுவான தளங்களாகச் செயல்படும்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு 11,894.48 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

கூட்டுறவு நிறுவனங்கள் தமிழ்நாட்டின் ஊரகப் பொருளாதாரத்திற்கு திறம்பட உதவி வருகிறது. நடப்பு 2019-2020 ஆம் நிதியாண்டில் பயிர்க் கடன்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட 10,000 கோடி ரூபாய் இலக்கில் இதுவரை 7,595.59 கோடி ரூபாய் 10.6 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள்

*நியாயமான விலையைப் பெறுவதற்கும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் விளைபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற பண்ணை விளைபொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்ய உதவும் வகையில் கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் நிதியாண்டில் பயிர்க் கடனாக மொத்தம் 11,000 கோடி ரூபாய் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக வழங்கப்படும் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடன் தவணைகளை முன்கூட்டியே செலுத்துபவர்களுக்கு முழு வட்டியை தள்ளுபடி செய்ய ஏதுவாக, வரவு-செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**பொது விநியோகத் திட்டம்**

*கடந்த 2013 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. முழுமையாக கணினிமயமாக்கப்பட்ட பொது விநியோக முறை 38.51 கோடி ரூபாய் செலவில் மேலும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்மார்ட் குடும்ப அட்டை வைத்திருப்போர், மாநிலத்தின் எந்தவொரு நியாய விலைக் கடையிலும் தங்களுக்குரிய பொருட்களை வாங்கிக்கொள்ளும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். இதுவரை, மாநிலம் முழுவதும் 585 நியாய விலைக் கடைகள் அம்மா மினி கூட்டுறவு சிறப்பு அங்காடிகளாக மேம்படுத்தப்பட்டு, 300-க்கும் மேற்பட்ட பொருட்கள் பொதுமக்களின் நலனுக்காக 5 சதவீதம் தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகின்றன. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 2020-2021 ஆம் நிதியாண்டிலும் துவரம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை மானிய விலையில் தொடர்ந்து வழங்கப்படும். 2020 ஆம் ஆண்டு ஜனவரியில், குடும்பம் ஒன்றிற்கு தலா 1,000 ரூபாயை பொங்கல் பரிசாக வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்கெனவே 2,363.13 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தம் 6,500 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காகவும், பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்திட கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியமாக 400 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.*

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முற்பகல் 10-55

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம்**

2016-2017 ஆம் ஆண்டில், பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றமாக, நிலையான விலைகளில், மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டுதலில், வேளாண் துறையின் பங்களிப்பைவிட கால்நடைத் துறையின் பங்களிப்பு முதன்முறையாக அதிகரித்தது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளிலும் இந்த நிலை தொடர்ந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மதிப்புக் கூட்டுதலில் 5.83 சதவீதமாகவுள்ள கால்நடைத் துறையின் பங்களிப்பிற்கு, 0.47 சதவீதம் கூடுதல் பங்களிப்புடன் மீன் வளத் துறையும் வலு சேர்க்கிறது. மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முன்னோடித் திட்டங்களான விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள், கோழி அலகுகள் வழங்கும் திட்டம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. மக்களின் வருமானம் வளர்ந்து வருவதை, அவர்கள் பால், பால் பொருட்கள், முட்டை மற்றும் இறைச்சி போன்ற புரதச்சத்து உணவுகளை உண்ணும் பழக்கத்திற்கு முன்னுரிமை அளித்து வருவதைக் காட்டுகிறது.

கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 1,060 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியும், 20 புதிய கால்நடை மருந்தகங்களைத் தோற்றுவித்தும், 10 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தியும், 6 பெருமருத்துவமனைகளையும், இரண்டு கால்நடை மருத்துவமனைகளையும் கால்நடை பன்முக மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தியும் உள்ளது. மேலும், 400 புதிய கிளை நிலையங்களையும் தோற்றுவித்துள்ளது. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள், அம்மா அவசர சிகிச்சை ஊர்தி சேவைகள் மூலமாக விவசாயிகளின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கால்நடை மருத்துவ சேவைகளை அரசு வழங்கும். 2011-2012 ஆம் ஆண்டு முதல் 614.57 கோடி ரூபாய் செலவில் 2,037 புதிய கால்நடை மருத்துவப் பிரிவுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதுடன், 87.20 கோடி ரூபாய் செலவில் 1,460 கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

கால்நடை பராமரிப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் விதமாக, சேலம் மாவட்டம் தலைவாசலில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கால்நடை அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பட்ட நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிறுவனத்தில் நாட்டு இன மாடுகளைப் பராமரிப்பது குறித்து தனிக்கவனம் செலுத்தப்படும். இக்கல்வி நிலையமும், கால்நடைப் பூங்காவிற்கான இதர வசதிகளும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் நிதி ஆதாரங்களிலிருந்தும், நபார்டு வங்கியின் நிதி உதவியுடனும், 1,020 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதற்காக, 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 199.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2011–2012 ஆம் ஆண்டு முதல் பால் கொள்முதலை உயர்த்துவதற்கான பல்வேறு பணிகள் 917.73 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பலனாக, 2010–2011 ஆம் ஆண்டில் நாளொன்றிற்கு 20.67 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் நிறுவனத்தின் சராசரி பால் கொள்முதல், 2019–2020 ஆம் ஆண்டில் 33.96 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில், ஆவின் நிறுவனத்தை வலுப்படுத்துவதற்காக, கூடுதலாக ஆறு பால் ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நபார்டு வங்கியின் பால் வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின்கீழ் 304 கோடி ரூபாய் செலவில் நான்கு திட்டங்களை மேற்கொள்வதற்கு மத்திய அரசின் அனுமதியை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

**மீன் வளம்**

மீனவர்களின் நலனைப் பேணவும், மீன்பிடிப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மீன் வளத் துறையில் பெரிய முதலீடுகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து வருகிறது. மீன்பிடித் தடைக்காலத்தில் உதவித் தொகை வழங்குவதற்காகவும், மீனவர்களுக்கான சேமிப்புத் திட்டத்திற்காகவும், சிறப்பு உதவித் தொகை வழங்குவதற்காகவும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 298.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை தொடர்புகொள்ளவும், கண்காணிக்கவும் இந்திய

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

விண்வெளி ஆய்வு மையம் (ISRO) டிரான்ஸ்பாண்டர் கருவிகளை உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மீன்பிடி விசைப் படகுகளில் ஏற்கெனவே 507 டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 4,997 மீன்பிடி விசைப் படகுகளில் 18 கோடி ரூபாய் செலவில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்படும். பாக் வளைகுடா பகுதி மீனவர்களுக்கான, 2,000 இழுவலை மீன்பிடிப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றிடும் சிறப்புத் திட்டம் 1,600 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக, 500 தூண்டில் மற்றும் செவுள் வலையுடன்கூடிய ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகள் கட்டப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-00

235 கோடி ரூபாய் செலவில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆலம்பரைக் குப்பத்திலும், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், நாகப்பட்டினம் மாவட்டம், ஆறுகாட்டுத் துறையிலும் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும். தூத்துக்குடி மாவட்டத்தில், 30 கோடி ரூபாய் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மீன் வளத் துறைக்கு 1,229.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரத் துறை**

தமிழ்நாடு போன்ற நீர் பற்றாக்குறை மாநிலத்தில் நீர்நிலைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நீர்வள ஆதார அமைப்பை பாதுகாத்தல் மற்றும் வலுப்படுத்துதல் இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாகத் தொடங்கியுள்ளார்கள். இவ்வியக்கத்தின் நோக்கமானது, மழைநீர் சேகரித்தல், நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், நிலத்தடி நீர் செறிவூட்டல், விவசாயப் பயன்பாட்டிற்கான நீரை திறம்படப் பயன்படுத்துதல், பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்தல் மற்றும் நீர்வழிகள், நீர்வள ஆதாரங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை மீட்டெடுத்தல் ஆகும்.

மிகவும் பாராட்டுப் பெறும் குடிமராமத்து திட்டத்தின்கீழ், இதுவரை 4,865 பணிகளை, (மேசையைத் தட்டும் ஒலி) 930.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை மேற்கொள்வதற்கு

அனுமதி வழங்கப்பட்டு, 4,059 பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மீதம் உள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், பாசன ஏரிகளைப் புனரமைப்பதற்காக 510.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் 1,364 நீர்ப் பாசனப் பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் குடிமராமத்து திட்டத்திற்கென 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5,000 ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள சிறிய பாசன ஏரிகள், கிராம ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 25,000 குளங்கள் மற்றும் ஊருணிகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஒதுக்கீடாக 500 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளதுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 750 கோடி ரூபாய் நிதியையும் இணைத்துள்ளது. இதுவரை, மொத்தம் உள்ள 30,000 பணிகளில், 21,444 பணிகள் நிறைவடைந்துள்ளன. 2020-2021 ஆம் ஆண்டில், கிராமங்களில் மீதமுள்ள குளங்கள் மற்றும் ஊருணிகள் ஆழப்படுத்துதல் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள கோயில் குளங்கள் புனரமைப்பு ஆகிய பணிகள், பல்வேறு திட்டங்களின் கீழான நிதியைக் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும். இவை, நிலத்தடி நீர் அமைப்புகளை செறிவூட்டுவதுடன், மிக அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும்.

2019-2020 ஆம் ஆண்டில், காவேரி வடிநிலப் பகுதிகளில் உள்ள 281 கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளுக்காக 60.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் இப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தியதால், பாசன நீர் எவ்வித இடையூறுமின்றி காவேரி வடிநிலத்தின் கடைமடைப் பகுதி வரை சென்றடைந்தது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் காவேரி வடிநிலப் பகுதிகளில் உள்ள கால்வாய்களில், 392 தூர்வாரும் பணிகளை அடுத்த பருவமழைக் காலத்திற்கு முன்னதாக நிறைவு செய்வதற்காக, 67.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவேரிப் படுகையில் நீர்ப் பாசன உட்கட்டமைப்புகளை விரிவாக்கல், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்லணைக் கால்வாய் அமைப்பின் பணிகள், ஆசிய உட்கட்டமைப்பு

முதலீட்டு வங்கியின் உதவியுடன் 2,298 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன், 1,560 கோடி ரூபாய் செலவில் பருவகால மாற்றத் தழுவல் திட்டத்தை செயல்படுத்தும் பணி காவேரி பாசனப் பகுதியில் முழுவீச்சில் முன்னேற்றமடைந்து வருகிறது. இத்திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 105.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1,995 கோடி ரூபாய் திட்டச் செலவில், வெண்ணார் உப வடிநிலத்தில் ஏனைய பகுதிகளை இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான கோரிக்கையையும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆய்வு செய்து வருகிறது.

முற்பகல் 11-05

கட்டளை உயர்மட்டக் கால்வாய் பணிக்காக 335.50 கோடி ரூபாயும், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நொய்யல் துணைப் படுகை திட்டம், 184 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ராஜவாய்க்கால் திட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெள்ள உபரி நீரினை மேட்டூர் அணையிலிருந்து சேலம் மாவட்டத்தில் வறண்ட குளங்களுக்கு திருப்பிவிடுவதற்கான சாரபங்கா நீரேற்றுப் பாசனத் திட்டம் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 463.25 கோடி ரூபாய் செலவில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே கதவணை மற்றும் 387.60 கோடி ரூபாய் செலவில் திருச்சி மாவட்டம், முக்கொம்பில் புதிய கதவணை கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

நடந்தாய் வாழி காவேரி திட்டத்திற்கான 11,250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதனிலைத் திட்ட அறிக்கை இந்திய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு கொள்கை ரீதியான ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் முதல்கட்ட திருத்தப்பட்ட திட்டச் செலவினம் 803.49 கோடி ரூபாயுடன் 89 அணைகளும், இரண்டு பாசனப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு பராமரிப்புப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அணைகளுக்கான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டம் ஜுன் 2020 வரை நீட்டிக்கப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் (DRIP-II) 610.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 37 அணைகள் சேர்க்கப்பட்டுள்ளது. அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டு கட்டங்களுக்கும் சேர்த்து (DRIP-I & II) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 220.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம் 2,962 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 18 உப வடிநிலப் பகுதிகளில், 1,325 குளங்கள் மற்றும் 107 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல், மற்றும் 45 செயற்கை செறிவூட்டல் கிணறுகளை நிறுவுதல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 57 குளங்கள் மற்றும் இரண்டு முதன்மை பாசனக் கால்வாய்களை சீரமைத்தல் ஆகிய பணிகள் முதல் கட்டமாக 787.19 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இப்பணிகள் ஜுலை 2020 இல் முடிவடைய உள்ளது. இரண்டாம் கட்டத்தில் 16 உப வடிநிலப் பகுதிகளில், 906 குளங்கள் மற்றும் 183 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல் மற்றும் 37 செயற்கை செறிவூட்டல் கிணறுகள் கட்டுமானப் பணிகள் 649.55 கோடி ரூபாய் செலவில் 2020-2021 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 583.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்திக்கடவு-அவினாசி நீர்ப் பாசனத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவேரி குண்டாறு இணைப்புத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7,677 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் முதல் கட்டத்தில், காவேரி முதல் தெற்கு வெள்ளாறு வரையிலான இணைப்புக் கால்வாய் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் முதனிலைப் பணிகளை

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேற்கொள்வதற்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2014-2015 முதல் 2019-2020 ஆம் ஆண்டுவரை, 2,241.19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (RIDF)கீழ், புதிய குளங்களை உருவாக்குதல், புதிய அணைக்கட்டுகளைக் கட்டுதல் மற்றும் புதிய பாசன வாய்க்கால்கள் அமைப்பதற்கான 307 பணிகளை செயல்படுத்தியதில், 261 பணிகள் நிறைவடைந்து, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், நபார்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளைச் செயல்படுத்த 655.38 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நீர்ப் பாசனத்திற்காக ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டு 6,991.89 கோடி ரூபாயாக உள்ளது.

முற்பகல் 11-10

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

வனங்களைப் பாதுகாப்பதும், வன விலங்குகளைக் காப்பதும் அரசின் தலையாய கடமையாகும். 2019 ஆம் ஆண்டிற்கான இந்திய வன நிலவர அறிக்கையின்படி, 2017 ஆம் ஆண்டைக் காட்டிலும் 83.02 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு தமிழ்நாட்டின் வன நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில், புலிகள் மற்றும் அவைகளின் வாழ்விடங்களைப் பேணுவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, 2014 ஆம் ஆண்டில் 229 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 264 ஆக அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் (Tamil Nadu Biodiversity Conservation and Greening Project) இரண்டாம் கட்டப் பணிகள் 2020-2021 ஆம் நிதியாண்டில் 920.56 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும். சமூகப் பங்களிப்புடன் சீர்குலைந்த காடுகளை மீட்டெடுப்பதற்கான ஒரு விரிவான திட்டத்தை 2,029.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நபார்டு நிதியுதவிக்காக, நிலைக்கத்தக்க வேளாண்மை, நீர்வள ஆதாரப் பாதுகாப்பு, கடலோர மண்டல மேலாண்மை, வனம்

மற்றும் உயிர்ப் பன்முகத்தன்மை, நிலைக்கத்தக்க வாழ்விடங்கள், எரிசக்தி செயல்திறன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சூரியவழி எரிசக்தி, அறிவுசார் மேலாண்மை என்ற ஏழு துறைகளை உள்ளடக்கிய பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் 2.0 தயாரிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத் தழுவல் மற்றும் தணிப்புக் கொள்கையை செயல்படுத்துவதற்காக, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அடிப்படைத் தளமாக இந்த செயல்திட்டம் அமையும்.

கூவம் நதியில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. அடுத்த கட்டத்தில், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதன் வடிகால்களையும் கூவம், அடையாறு நதிகளின் அனைத்து வடிகால்களையும் 5,439.76 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறுசீரமைக்கும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தில், நதிகளில் கழிவுநீர் கலப்பதை தவிர்க்கும் திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்கெனவே 1,001 கோடி ரூபாய் அனுமதி வழங்கியுள்ளது. ஒட்டுமொத்த செலவினத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்புகள் கட்டுமானத்திற்கான 3,339.90 கோடி ரூபாயும் அடங்கும். மீதமுள்ள நிதி, திடக்கழிவு மேலாண்மை, நகர்ப்புற நீர்நிலை மேம்பாடு, நீரோடைகள் புனரமைப்பு போன்ற பணிகளுக்காக செலவிடப்படவுள்ளது. பொதுப் பணித் துறைமூலம் 25 கோடி ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியை மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். ஈரோடு மாவட்டம், ஓடத்துறை ஏரியை மீட்டெடுக்கும் பணிகள் 3.2 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டிய, வன உயிரினப் பாதுகாப்பிற்கான உயர்நிலைக் கல்வி நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இக்கல்வி நிலையத்திற்கு தொடர் மானியமாக 1.35 கோடி ரூபாய் உட்பட, 2.5 கோடி ரூபாய் மொத்த மானியத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு**

2019-2020 ஆம் ஆண்டில், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 4,558.16 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு

5,654.25 கோடி ரூபாயும் நிதிப் பகிர்வாக வழங்க நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5,306.95 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6,754.30 கோடி ரூபாயும் நிதிப் பகிர்வாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பெற வேண்டிய 2019-2020 ஆம் ஆண்டிற்கான அடிப்படை மானியமான 4,345.57 கோடி ரூபாயும், 2017-2018 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய செயல்திறன் மானியமான 2,029.22 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்று வரையில் பெறவில்லை. இந்நிலுவைகளை விடுவிக்குமாறு மாநில அரசு மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளால், 2018-2019 ஆம் ஆண்டிற்கான அடிப்படை மானியத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது.

முற்பகல் 11-15

பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தப்படவில்லை. பதினான்காவது நிதிக் குழு, 2019-2020 ஆம் ஆண்டிற்குப் பரிந்துரைத்திருந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியத் தொகையான 5,178.52 கோடி ரூபாய் என்பது, பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில் 2020-2021 ஆம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 3,607 கோடி ரூபாயும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1,737 கோடி ரூபாயும், அதாவது மொத்தமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் 5,344 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டினை ஒப்பிடும்போது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ள மானியங்கள் 31 சதவீதம் குறைந்துள்ளன. பதினைந்தாவது நிதிக் குழு கையாண்ட தவறான கணக்கீட்டு முறையே இத்தகைய குறைவிற்கு காரணமாகும். இந்த முரண்பாட்டினை இறுதி அறிக்கையில் சரி செய்யுமாறு நாங்கள் பதினைந்தாவது நிதிக் குழுவைக் கோருவோம்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மானியத் தொகையில், 'பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட

மக்கள்தொகை' கொண்ட ஐம்பது நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு தனியே மானியம் வழங்க பதினைந்தாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரையின்படி, தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளுக்கு மொத்த மானியமாக 556 கோடி ரூபாய் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமே மானியம் வழங்க பரிந்துரை செய்த பதினான்காவது நிதிக் குழுவைப் போன்று இல்லாமல், பதினைந்தாவது நிதிக் குழுவானது மூன்று கட்ட அளவிலான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மானியம் வழங்க பரிந்துரை செய்துள்ளது. இதனால், நிபந்தனையில்லாத மானிய விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. உரிய நேரத்தில், மானியங்களை விடுவிக்க வெளிப்படையான வழிமுறைகளை வகுக்குமாறு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

கிராமப்புற, நகர்ப்புறக் குடியிருப்புப் பகுதிகளில் இதுவரை மேற்கொள்ளப்படாத மிக அத்தியாவசியமான சிறு, சிறு பணிகளை மேற்கொள்வதன்மூலம், அப்பகுதிகளில் அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய இயலும். எனவே, 2020-2021 ஆம் ஆண்டில் இத்தகைய அத்தியாவசியமான உட்கட்டமைப்புப் பணிகளை 500 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்வதற்கான ஒருமுறை சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிமுகப்படுத்த உள்ளது. மாநில உயர்மட்டக் குழுவின் நேரடி மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் இப்பணிகள் விரைவாக முடிக்கப்படும்.

**ஊரக வளர்ச்சி**

நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கி கிராமப்புறப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்திவரும் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். புதிதாக உள்ளாட்சி அமைப்புத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது, கிராமப்புற மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும். எனவே, முதலமைச்சரின் கிராமத் தன்னிறைவு வளர்ச்சித் திட்டம் என்ற புதிய ஐந்து ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிமுகப்படுத்த உள்ளது. குடிநீர் வழங்கல், சுகாதாரம், கல்வி, உணவுப்

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பாதுகாப்பு, அணுகு சாலைக் கட்டமைப்பு, இடுகாடுகள்,தெரு விளக்குகள், வீட்டு வசதி, வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் குக்கிராம அளவில் தன்னிறைவு அடைவதற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், வளர்ச்சி இலக்குகளை கிராம ஊராட்சி மேம்பாட்டுத் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதன்மூலம், நிலைக்கத்தக்க இலக்குகள் கிராமப்புற அளவில் எய்தப்படும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உள்ளாட்சி பிரதிநிதிகள், கள அலுவலர்கள், சமூக ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் தற்போதுள்ள திட்டங்களின் நிதியை சரியாகப் பயன்படுத்தி தன்னிறைவு எய்தும் வண்ணம், பங்களிப்பு அணுகுமுறை தொடர்பான பயிற்சி உட்பட இதர பயிற்சிகள் வழங்கப்படும். இடைவெளியை நிரப்பும் ஊக்க நிதியம் உருவாக்கப்படும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையும் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான நெறிமுறைகளை வகுக்கும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இடைவெளியை நிரப்பும் ஊக்க நிதிக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11-20

மத்திய அரசின் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை 4,875.73 கோடி ரூபாய் செலவில் 4,41,637 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ், 8,968.39 கோடி ரூபாய் செலவில் 5,27,552 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 7,620 கோடி ரூபாய் செலவில் 3,80,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆட்சேபணையில்லா புறம்போக்கு நிலங்களில் வசித்து வருபவர்களின் வீட்டு மனைகளை வரன்முறை செய்து வருவாய்த் துறை பட்டா வழங்கியுள்ள நபர்களில் தகுதியான நபர்களுக்கு பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் (ஊரகம்) மற்றும் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டங்களின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு முதல் வீடுகள் கட்டித் தரப்படும். 2020-2021 ஆம் ஆண்டில், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2 இலட்சம் வீடுகளும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், அனைத்துப் பழங்குடியினர் குடும்பங்களுக்கும் வீட்டு வசதியை வழங்கும் வகையில், அவர்களுக்கான 8,803 வீடுகள் உட்பட 20,000 வீடுகளும் கட்டித் தரப்படும். முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், சூரிய ஒளித் தகடுகளை

நிறுவுவதற்கான தொகை, வீடு ஒன்றிற்கு 30,000 ரூபாய், வீட்டின் கட்டுமானச் செலவிற்கான தொகையுடன் சேர்க்கப்பட்டு, ஒட்டுமொத்த கட்டுமானச் செலவு வீடொன்றுக்கு 2.1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்திற்காக (ஊரகம்) 3,099.07 கோடி ரூபாயும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை செயல்படுத்துவதில், மொத்தமாக 8 தேசிய விருதுகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2019-2020 ஆம் ஆண்டில், 20.74 கோடி மனித உழைப்பு வேலை உருவாக்கப்பட்டு, 3,678.06 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக 375 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றிய, கிராமப்புறச் சாலைகளை தரம் உயர்த்திப் பராமரிப்பதற்காக தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டம் 1,200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டமானது 1,400 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். பிரதம மந்திரி கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின் மூன்றாவது கட்டப் பணிகளின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற வேளாண் சந்தைகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை இணைக்கக்கூடிய வகையில் 7,375 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சித் துறைக்காக 23,161.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**வாழ்வாதார இயக்கங்கள்**

கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளுக்கான வாழ்வாதார இயக்கங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும், அதாவது 388 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, இந்த இயக்கத்தின்கீழ், 83,257 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கத்திற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 450.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மொத்தமாக 1,08,416 இளைஞர்கள் 2014-2015 முதல் இது வரையில் பயிற்சி பெற்றுள்ளனர். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த திட்டத்திற்காக 299.60 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 28,063 இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும். தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டம் (Tamil Nadu Rural Transformation Project) 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில் உலக வங்கியின் நிதியுதவியுடன், 918.20 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தொழில்முனைவோர்களை ஊரகப் பகுதிகளில் ஊக்குவிப்பதற்காக, அதிலும் குறிப்பாக, பெண்கள், பழங்குடியினர், ஆதி திராவிடர் மற்றும் மாற்றுத் திறனாளிகளை தொழில்முனைவோர்களாக உருவாக்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 163.35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக ஒருங்கிணைப்பு, நிறுவன அமைப்புகளை மேம்படுத்துதல், திறன் பயிற்சிமூலம் வேலைவாய்ப்பு, நகர்ப்புறத்தில் வீட்டு வசதி இல்லாதவர்களுக்கு உறைவிடம், நகர்ப்புறத்தில் தெருவோர வியாபாரிகளுக்கான உதவி உள்ளிட்ட அம்சங்களுடன் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நிதியுடன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நிதியையும் ஒருங்கிணைத்து நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்காக

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

200 கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்காக 8 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**நகராட்சி நிருவாகம்**

நகரங்கள், வளர்ச்சியின் விசைப்பொறிகள் ஆகும். எனவே, நகர்ப்புற உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவது மற்றும் அடிப்படை வசதிகளை நகர்ப்புறங்களில் வழங்குவது, நகர்ப்புறங்களை மேலும் வாழ உகந்த இடமாக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது. குடிநீர் வழங்கல், கழிவுநீர், மழைநீர் வடிகால், சாலைகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு மாநில அரசு பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து நிதியைத் திரட்டுகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கப்பெறும், நிதிக் குழுவால் வழங்கப்படும் நிதிப் பகிர்வு மானியங்கள் உட்பட, சீரான வருவாயினங்களின் அடிப்படையில், நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் விதமாக, கடன் பத்திரங்களும் வெளியிடப்பட்டு நிதி திரட்டப்படும்.

முற்பகல் 11-25

திறன்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ், 11,000 கோடி ரூபாய் செலவில் 413 திட்டங்கள் 11 மாநகராட்சிகளில் செயல்படுத்துவதற்கான பணிகள் இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அம்ரூத் திட்டத்தின்கீழ், 445 திட்டங்கள் 28 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 11,441.32 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், 'திறன்மிகு நகரங்கள்' திட்டத்திற்காக 1,650 கோடி ரூபாயும், அம்ரூத் திட்டத்திற்காக 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன் 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் (Tamil Nadu Sustainable Urban Development Project (TNSUDP)) கீழ், ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்கள் திறன்மிகு நகர்ப்புற மேலாண்மைக்கான மாதிரி நகரங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 532.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த தொழில் வழித்தடங்களில் நகர்ப்புற மற்றும் சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், 8,155.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு

நகர்ப்புற முதலீட்டுத் திட்டம் (Tamil Nadu Urban Flagship Investment Programme (TNUFIP)) பெரிதும் உதவும். இத்திட்டத்தின்கீழ், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், ஆம்பூர் மற்றும் இராஜபாளையம் ஆகிய இடங்களில், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்றும் வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 406 கோடி ரூபாய் ஆகும்.

கொசஸ்தலை ஆற்றின் வடிநிலப் பகுதியில், 2,518 கோடி ரூபாய் செலவில், 765 கிலோ மீட்டர் நீளத்திற்கு சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த வெள்ளநீர் வடிகால் திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சி தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்காக, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி ஒப்புதலை விரைவில் எதிர்நோக்கி, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற சேவைகள், தெரு அமைப்பின் மேம்பாட்டிற்காக, ‘ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்’ தயாரிக்கப்பட்டு, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் 50 கோடி அமெரிக்க டாலர்கள் கடனுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. திறன்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ், சென்னை நீங்கலாக, தெரிவு செய்யப்பட்ட பத்து மாநகராட்சிகளில் நிலைக்கத்தக்க போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு மற்றும் இயந்திரம் சாரா போக்குவரத்தினை இத்திட்டம் ஊக்குவிக்கும்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கத்திற்கு 750 கோடி ரூபாய், சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்திற்கு 500 கோடி ரூபாய் உட்பட, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 18,540.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அம்மா உணவகம்**

சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர்களுக்கு குறைந்த விலையில் சத்தான, சுகாதாரமான உணவு வழங்குவதற்காக, மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள், 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாளன்று அம்மா உணவகங்களை திறந்து வைத்தார். இந்த முன்னோடித் திட்டம், உலக அளவில் நன்மதிப்பைப் பெற்றுள்ளதோடு, இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் இதைப் பின்பற்றி செயல்படுத்தி வருகின்றன. இம்முன்னோடித் திட்டத்திற்கு மேலும் புத்துணர்ச்சியூட்டும் பொருட்டும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மீதான நிதிச்சுமையை குறைப்பதற்கும், அம்மா உணவகத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 'இலாப நோக்கமற்ற' ஒரு சிறப்பு நோக்கு முகமையை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உணவகங்களை அதிக அளவில் பயன்படுத்திவரும் கட்டுமானப் பணியாளர்களை கவனத்தில் கொண்டு, அவர்கள் தங்கும் மற்றும் பணிபுரியும் இடங்களுக்கு அம்மா உணவகம் உணவு கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்படும். இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்காக பெருநிறுவன சமூகப் பொறுப்பு பங்களிப்பு மற்றும் நன்கொடை பங்களிப்புகளை இந்த சிறப்பு நோக்க முகமை சேகரிக்கும். அம்மா உணவகங்களுக்கு மானிய விலையில் உணவுப் பொருட்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய் வரவுகள், பெறப்பட்ட பங்களிப்புகள், நன்கொடைகள் ஆகியவற்றிற்கும் அதன் செலவினத்திற்கும் இடையேயான பற்றாக்குறையை சரிசெய்வதற்கு அரசு நிதியுதவி அளிக்கும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்மா உணவகத் திட்டத்திற்காக, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-30*

**குடிநீர் வழங்கல்**

2024 ஆம் ஆண்டிற்குள் அனைத்து கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கும் வீட்டுக் குழாய் இணைப்புகள்மூலம் போதுமான அளவு தரமான குடிநீர் வழங்கப்படுவதற்காக பாரதப் பிரதமர் அவர்கள் ஜல் ஜீவன் மிஷன் (JAL JEEVAN MISSION) திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், அனைத்து கிராமக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் ஒரு செயல் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வடிவமைக்கும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்து வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வரலாற்றில் முதன்முறையாக, 2019 ஆம் ஆண்டு டிசம்பர்

மாதத்தில், சாதனை அளவாக, நாளொன்றிற்கு 2,000 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கியிருக்கிறது. எட்டு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை 616.68 கோடி ரூபாய் மொத்தச் செலவில், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ள உள்ளது. தனது முழுத் திறனைப் பயன்படுத்திட பல தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டதன்மூலம் இது சாத்தியமானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2019-2020 ஆம் ஆண்டில், சேலம், தேனி, திண்டுக்கல், ஈரோடு, விழுப்புரம், திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 195 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 3.11 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், 10 குடிநீர் வழங்கல் திட்டங்கள், 137.03 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. எட்டு மாநகராட்சிகள், 22 நகராட்சிகள், 41 பேரூராட்சிகள் மற்றும் 19 மாவட்டங்களில் உள்ள 5,504 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 7,134.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் 56 குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படும்.

இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 3,041 கோடி ரூபாய் மொத்தச் செலவில் நாள் ஒன்றிற்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, இரண்டு கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவி கோரப்பட்டு, அதற்கான ஒப்புதல்கள் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 1,259.38 கோடி ரூபாய் செலவில், நெம்மேலியில், நாள் ஒன்றிற்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட, எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்புமூலம் கடல்நீரை குடிநீராக சுத்திகரிப்பு செய்யும் ஆலை கட்டுமானத்தை சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னைக்கு அருகில் உள்ள பேரூரில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் 4,267.70 கோடி ரூபாய் நிதியுதவியுடன் 6,078.40 கோடி ரூபாய் மொத்த திட்ட செலவில் நாள் ஒன்றிற்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு முறையில் கடல்நீரை சுத்திகரிப்பு செய்யும் ஆலை நிறுவுவதற்கான நிருவாக ஒப்புதலை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட வடிவமைப்பை அமைத்திட ஆலோசகர் நியமிக்கப்பட்டு, திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். இதற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 156.15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கழிவுநீர் மறுசுழற்சியை ஊக்குவிப்பது, தமிழ்நாடு நீர்வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் பெருக்குதல் இயக்கத்தின் ஒரு முக்கியக் குறிக்கோளாகும். நன்னீர் ஆதாரங்களின் மீதான சார்புநிலையைத் தவிர்க்கவும், நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்கவும், 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டிற்கான 'சுத்திகரிக்கப்பட்ட நீர் மறுபயன்பாடு கொள்கையை' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயம்பேட்டில் 486.21 கோடி ரூபாய் செலவிலும், கொடுங்கையூரில் 348 கோடி ரூபாய் செலவிலும், நாள் ஒன்றிற்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன்கொண்ட மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடு பரவல் (TTRO) சுத்திகரிப்பு நிலையங்கள் இரண்டினை தொடங்கி வைத்தார். மேலும், பெருங்குடியிலும், நெசப்பாக்கத்திலும் நாள் ஒன்றிற்கு 10 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட 2 மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கானபணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னைக்குள் குடிநீர் வீணாவதை தடுப்பதற்கு, குடிநீர் வழங்கும் அமைப்பை மேம்படுத்த வேண்டியது அவசரத் தேவையாகும். பாதாள சாக்கடைத் திட்டம் சென்னை மாநகராட்சியின் 14 இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் அவசியமுள்ளது. நாளொன்றிற்கு 260 மில்லியன் லிட்டர் அளவு கழிவுநீர் சுத்திகரிக்கக்கூடிய திறன் ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தேவைகளை நிறைவு செய்வதற்கு, 4,500 கோடி ரூபாய் செலவில், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, நகர்ப்புற குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கு ஆசிய உட்கட்டமைப்பு வளர்ச்சி வங்கியின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-35*

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவான, தமிழ்நாட்டில் குடிசை இல்லாத நகரங்கள் உருவாக்குவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக உள்ளது. (மேசையைத் தட்டும்

ஒலி) 2014-2015 ஆம் ஆண்டு முதல் ‘பிரதம மந்திரி வீட்டு வசதித் (நகர்ப்புறம்) திட்டத்தின்’, பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டும் பிரிவின் (BLC) கீழ் 16,774.77 கோடி ரூபாய் செலவில் 5,53,244 வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்துடன், வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சி வீட்டு வசதி (AHP) பிரிவின்கீழ், 1,32,900 அடுக்குமாடி குடியிருப்புகளை 13,677.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கும் மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில், 1,12,876 தனி வீடுகள் மற்றும் 65,290 அடுக்குமாடி குடியிருப்புகளுக்குமான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘பிரதம மந்திரி வீட்டு வசதித் (நகர்ப்புறம்) திட்டத்திற்காக’ 3,700 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள உலக வங்கியின் தலைமையகத்தில் அதன் உயர்நிலை நிருவாகிகளை நாங்கள் சந்தித்த பின்னர், தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி துறைக்கு உலக வங்கியிடம் கோரியிருந்த நிதியுதவிக்கான ஒப்புதல் இறுதிக்கட்ட நிலையை எட்டியுள்ளதை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு நிதி வசதிகள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின்கீழ், கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள்மீது கவனம் செலுத்துதல், சமூகத்தில் உள்ள அனைவரும் பயனடையும் வகையில் திறமையாகச் செயல்படும் ஒரு வீட்டு வசதி சந்தையை உருவாக்கல், பொதுத் துறையில் ஏழை, எளியோர்க்கு வீடுகள் கட்டித் தரவும் வகை செய்யும். இத்திட்டத்திற்கான வளர்ச்சிக் கொள்கை வடிவமைப்பு நிதியாக 45 கோடி அமெரிக்க டாலர் நிதியுதவி ஒதுக்கப்பட்டு, முதற்கட்ட நிதியுதவியாக 20 கோடி அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்கப்படும். முதலீட்டுத் திட்டங்களுக்கான நிதி வசதியின்கீழ், 504 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம், 5 கோடி அமெரிக்க டாலர் நிதியுதவியை உலக வங்கியிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும். 2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கென 169.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் 50 கோடி அமெரிக்க டாலர் கடனுதவியுடன், 5,000 கோடி ரூபாய் (71.5 கோடி அமெரிக்க டாலர்) மொத்த மதிப்பீட்டுச் செலவில், ‘நகர்ப்புற ஏழை, எளியவர்களுக்கான

நிலைக்கத்தக்க வீட்டு வசதி மற்றும் உறைவிடத் திட்டத்தின்'கீழ், வெள்ளத்தால் பாதிப்பிற்கு உள்ளாக வாய்ப்புள்ள நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்போர், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வசதியும், மண்டலத் திட்டமிடல் பணிகளும் 2020-2021 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டமான 21.5 கோடி அமெரிக்க டாலர் மதிப்புள்ள திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், திருநெல்வேலி, காரைக்குடி, தஞ்சாவூர், பள்ளிப்பாளையம், திண்டுக்கல் மற்றும் தேனியில் 431 கோடி ரூபாய் செலவில் ஆறு துணை திட்டங்கள் உடனடியாகச் செயல்படுத்தப்பட உள்ளன. 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 171 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டடுக்கு கொண்ட தமிழ்நாடு உறைவிட நிதியானது, நகர்ப்புற வாங்கத்தக்க வீட்டு வசதித் திட்டங்களுக்கு முதலீடு பெற்றுத் தருவதற்கு உருவாக்கப்பட்ட இந்தியாவில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய முதல் முதலீட்டு நிதியம் ஆகும். 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு உறைவிட நிதிய விதிகள் தற்போது வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்நிதியம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கட்டுமானத் திட்டங்களுக்கு விதிக்கப்படும் உறைவிடக் கட்டணங்களை இந்நிதியத்தில் சேர்க்க இவ்விதிகள் வகை செய்கின்றன. உறைவிட நிதியின் இரண்டாம் அடுக்கு (Tier-II), இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் (SEBI) பதிவு செய்யப்பட்ட, முதல் வகை சமூக மாற்று முதலீட்டு நிதியமாகும். உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, முறையே 245 கோடி ரூபாய் மற்றும் 700 கோடி ரூபாய் முதலீட்டை வாங்கத்தக்க வீட்டு வசதித் துறை வளர்ச்சிக்காக அளிக்க உறுதியளித்துள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்காக 205.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-40*

பல்வேறு பொது உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நில வசதி தேவைப்படுகிறது. பல நேரங்களில், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட பின்னர், நில மதிப்பில் ஏற்படும் உயர்வின் பலனை, நிலம் வழங்கியவர்கள் பெற இயல்வதில்லை. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை கொண்டுவந்து, வளர்ச்சி உரிமைகள் பரிமாற்றத்

*2020 பிப்ரவரி 14]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*திட்டம் மற்றும் நிலத்திரட்டுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற இரண்டு மாற்றுவழி திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தியுள்ளது. அரசின் திட்டங்களுக்கு நிலம் வழங்குபவர்கள், நிலத்தின் மீதான தங்களின் சில உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்வதையும், அதன்மூலம் புதிய உட்கட்டமைப்புத் திட்டத்தினால் நிலத்தின் மதிப்பில் ஏற்படும் உயர்வின் நியாயமான பலன்களைப் பெறுவதையும் இந்த இரு திட்டங்கள் உறுதி செய்கின்றன. நில உரிமையாளர்கள், நில மேம்பாட்டில் பங்குதாரர்களாக உருவெடுக்கும் இத்திட்டங்களினால், உட்கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை விரைவாகத் திரட்ட இயலும்.*

**சென்னை மாநகரக் கூட்டாண்மை**

*சென்னை மாநகரம் தொடர்ந்து நிலைக்கத்தக்க பொருளாதார வளர்ச்சி பெறுவதை உறுதி செய்வதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் ஒரு முக்கிய முயற்சியாக, உலக வங்கியின் ஆதரவுடன் 'சென்னை மாநகரக் கூட்டாண்மை' என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும். பெருநகரப் போக்குவரத்து, நீர் ஆதாரங்களின் தாங்குத்தன்மை மற்றும் நகர நிருவாகம் மற்றும் நிதி மேலாண்மை என்ற மூன்று முக்கியத் தூண்களை இத்திட்டம் மையமாகக் கொண்டுள்ளது. திட்டத்தின் நகர்ப்புறப் போக்குவரத்துப் பிரிவின்கீழ், சென்னை மெட்ரோ இரயில், தெற்கு இரயில்வே, மாநகரப் போக்குவரத்துக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் துறை ஆகிய பல்வேறு நகர்ப்புறப் போக்குவரத்து முகமைகளின் முதலீடுகளையும், உத்திகளையும் சிறப்பான முறையில் பயன்படுத்தி, ஒரு ஒருங்கிணைந்த போக்குவரத்து முறை ஏற்படுத்தப்படும். 'சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்துக் குழுமம்' (CUMTA) மறுசீரமைக்கப்பட்டு, அனைத்துத் துறைகள் மற்றும் போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்துத் தரும் ஒரு அமைப்பாக வலுவூட்டப்படும். திட்டத்தின் நீர் ஆதாரங்களின் பிரிவின்கீழ், சென்னையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வெள்ளம் மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கும், குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கும் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை நகரம் முழுவதும் படிப்படியாக, 24 மணிநேரமும் குடிநீர் வழங்குதல், கழிவுநீரை சேகரித்து மறுசுழற்சி செய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல், சென்னைப் பெருநகரக்*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தை உலகத் தரம் வாய்ந்த சேவை நிறுவனமாகத் தரம் உயர்த்துதல் மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான முதலீடுகள் ஆகியவை இத்திட்டத்தின் முக்கியப் பகுதிகளாக அமையும். மேலும், சென்னை மாநகரக் கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ், நகர்ப்புற நிருவாகம் மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகிய பிரிவை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் முக்கிய பங்குதாரர்களாக இணைந்து, அவர்களால் செயல்படுத்தப்படும். சென்னை மாநகரக் கூட்டாண்மைக்கு உலக வங்கியின் நிதியுதவியாக 100 கோடி அமெரிக்க டாலர்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு, 2020-2021 ஆம் ஆண்டில் தேவையான ஒப்புதல்கள் பெறப்படும்.

## நெடுஞ்சாலைத் துறை

'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' (CRIDP) மாநிலத்தின் சாலை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 3,256 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல் பணிக்கும், 3,597 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளின் ஓடுதளப்பாதை தரத்தினை மேம்படுத்துதுல் பணிக்கும், 56 பாலங்கள் மற்றும் சிறுபாலங்களுக்கான கட்டுமானப் பணிகளுக்கும் 1,718 இதர பணிகளை மேற்கொள்வதற்கும், 2019-2020 ஆம் ஆண்டில் 4,521.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 5,500 கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்படுகின்றது.

பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவள்ளூர், விருதுநகர் மற்றும் பழனி ஆகிய கோட்டங்களில் இதுவரை செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் தஞ்சாவூர் கோட்டத்திலும் செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோபிசெட்டிப்பாளையம் கோட்டமும் செயல்பாடு அடிப்படையிலான ஒப்பந்த முறையின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் கொண்டுவரப்படும்.

*2020 பிப்ரவரி 14]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*முற்பகல் 11-45*

*கிராமப்புற ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு உயர்த்தப்படும் பணியின் நான்காவது கட்டம், 2020-2021 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். இதுவரை, 4,861.70 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை 2,772.48 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகள் நிறைவுற்றுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டில் 1,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி 1,050 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதற்கென, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 1,050 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*உலக வங்கிக் கடன் உதவியுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்திவரும் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' இரண்டாவது கட்ட திட்டப் பணிகளுக்கு (*TNRSP-II*) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 615.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன் 655 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 6,448 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் புறவழிச் சாலைகளை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டம் 12,301 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதில், முதல் கட்டமாக எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரையிலான பகுதிக்கான நில எடுப்புப் பணிகள் 951 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டு, தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் முதல் பிரிவிற்கான பணிகள் 2,673 கோடி ரூபாய் செலவில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவியுடன் மேற்கொள்வதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை சுற்றுவட்டச் சாலையின் மேலும் மூன்று பிரிவுகளுக்கான நில எடுப்புப் பணிகளை 2,603.32 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பகுதி 2 மற்றும் 3-ன்கீழ், தச்சூர் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரையிலான பணிகளுக்கு,*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் (OPEC) சர்வதேச வளர்ச்சி நிதியம் ஆகியவற்றின் 3,346.49 கோடி ரூபாய் கடன் உதவியும் பெறப்பட உள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், வாகன ஓட்டிகளின் நேரத்தை சேமிப்பதற்காகவும், வாகனங்களின் இயக்கச் செலவினைக் குறைப்பதற்காகவும், 'சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டம்' 4,257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, புதிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 1,122 கோடி ரூபாய் செலவில் நிலம் கையகப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதி அளித்துள்ளது. 1,620 கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூர் விமான நிலையத்திலிருந்து உப்பிலிபாளையம் வரையில் உள்ள அவினாசி சாலை நெடுகிலும் 10.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்த்தப்பட்ட சாலைகள் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, 2020-2021 ஆம் ஆண்டிற்கான, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 15,850.54 கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, தமிழ்நாடு அரசின் பொதுப் போக்குவரத்து வசதிகள் பெரும் பங்காற்றியுள்ளன. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், சராசரியாக 6.58 ஆண்டுகள் ஆயுட்காலம் கொண்ட 19,496 பேருந்துகளை தினசரி இயக்கி வருகின்றன. போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதுடன், எரிபொருள் இயக்கத்திறனும் ஒரு லிட்டருக்கு 5.34 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. விபத்து விகிதமும் ஒரு இலட்சம் கிலோமீட்டர் இயக்கத்திற்கு 0.12 என்ற அளவிற்கு குறைந்துள்ளது.

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முற்பகல் 11-50

பேருந்துக் கட்டணங்களை குறைந்த அளவில் வைத்திருப்பதுடன், போக்குவரத்துக் கழகங்களின் இயக்கச் செயல்திறனையும், நிதிநிலையையும் மேம்படுத்தி, பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியுடன் உள்ளது. 1,580 கோடி ரூபாய் மதிப்பிலான பாரத் ஸ்டேஜ்-VI தரம் கொண்ட 2,213 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு ஏதுவாக, ஜெர்மன் வளர்ச்சி வங்கியிடமிருந்து முதற்கட்ட நிதியுதவி பெறுவதற்கான திட்ட ஒப்பந்தம், 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் நாளன்று கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 960 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஃபேம் இந்தியா-II திட்டத்தின்கீழ், 525 மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளும் விரைவில் இறுதி செய்யப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்தரமான பொதுப் போக்குவரத்து, பொது நன்மை அளிக்கும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அதை செம்மையாக இயக்குவதற்கு அரசின் உதவி தேவை என்பதையும் நன்கு அறிந்துள்ளது. டீசல் விலை உயர்வினால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவினை ஈடுசெய்ய 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 298 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டணமில்லா பயண அட்டைகள் வழங்கும் திட்டத்தால், ஜனவரி 2020 வரை ஏற்பட்ட செலவினை ஈடு செய்ய 1,050 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரை ஓய்வுபெற்ற ஊழியர்கள் பெற வேண்டிய ஓய்வுகாலப் பலன்களை வழங்கிட, 2019-2020 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு குறுகிய காலக் கடனாக வழங்க 1,093 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், நிர்பயா நிதியத்தின்மூலம் 75.02 கோடி ரூபாய் செலவில் கண்காணிப்புக் கேமராக்கள் அனைத்துப் பேருந்துகளிலும் பொருத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துப் பேருந்துகளிலும், பணமில்லாப் பரிவர்த்தனையை நடைமுறைப்படுத்தும் வகையில் மின்னணு பயணச்சீட்டு முறையை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 2,716.26 கோடி ரூபாய் போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மெட்ரோ இரயில்

முழுமையாகச் செயல்படும் மெட்ரோ இரயில் போக்குவரத்து அமைப்பை சென்னை நகரம் பெற்றுள்ளது. நவீன பொதுப் போக்குவரத்து முறையின் பயன்களை மக்கள் பெறுவதற்கு, போக்குவரத்து வலையமைப்பை மேலும் விரிவுபடுத்துதல் அவசியமாகும். எனவே, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ், 118.90 கிலோ மீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை விரைவில் முடிப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை மற்றும் மாதவரம் முதல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான 52.01 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித்தடங்களுக்கு நிதியுதவி வழங்க ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான திட்ட வடிவமைப்புகள் தயாராக உள்ள நிலையில், இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து, இரண்டாம் கட்டத்தின் எஞ்சியுள்ள சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரையிலும், சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலும் மற்றும் சென்னை கலங்கரைவிளக்கத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை வரையிலுமான வழித்தடப் பகுதிகளுக்கு, நிதி திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்ட திட்டத்திற்கு, 50 சதவீத பங்கு மூலதனத்தினை மத்திய அரசு வழங்கியது போன்று, இந்த இரண்டாம் கட்ட திட்டத்திற்கும் 50 சதவீத பங்கு மூலதனம் வழங்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு பங்கு மூலதன உதவி, சார்நிலைக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடனை விடுவிப்பதற்காக மொத்தம் 3,100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*2020 பிப்ரவரி 14]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**எரிசக்தி**

*2018-2019 ஆம் ஆண்டில், 1,467 யூனிட்டுகள் தனிநபர் எரிசக்திப் பயன்பாடு கொண்டிருந்த தமிழ்நாடு, நாட்டில் அதிக தனிநபர் எரிசக்திப் பயன்பாடு கொண்ட மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. 2011 ஆம் ஆண்டு முதல் மாநில, மத்திய அரசுகளின் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் உட்பட மின்சக்தி கொள்முதல் மூலம் 15,296 மெகா வாட் உற்பத்தித் திறன் கூடுதலாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தற்போதைய ஒட்டுமொத்த நிறுவுதிறன் 31,780 மெகா வாட்டாக சாதனை அளவாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில், 13,343 மெகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனும் அடங்கும்.*

*முற்பகல் 11-55*

*மின்சார உள்கட்டமைப்பில், மின் தொடரமைப்புக் கட்டமைப்பு முக்கியமானதாகும். தென் மாவட்டங்களில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான கட்டமைப்பில் இணைப்பதற்கும், சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தில் உள்ள மின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், 765 கிலோ வோல்ட் மற்றும் 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதற்கும், ஒட்டப்பிடாரத்தில் 400 கிலோ வோல்ட் திறன் மற்றும் விருதுநகரில் 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், 4,650 கோடி ரூபாய் மொத்தச் செலவில் ஆசிய வளர்ச்சி வங்கியின் 45.1 கோடி அமெரிக்க டாலர் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*தடையில்லா, நம்பகமான மின் வசதியை தொடர்ந்து வழங்க, கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் மின் விநியோக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில், தற்போதுள்ள 5,692 விநியோக மின்மாற்றிகள், 785 கோடி ரூபாய் செலவில், 11 கிலோ வோல்ட் வளையச் சுற்றுத் தர அமைப்புகளாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பிடத்தக்க பயன்பாடு*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

மற்றும் நிதிப் பயன்கள் அளிக்கக்கூடிய, காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியையும், உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களின் மின் பயன்பாட்டையும் அளவிடும் தானியங்கி அளவீட்டுக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டத்தை, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் பெரிய அளவில் செயல்படுத்தி உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) திறமையான மின்சக்திக் கணக்கீடு மற்றும் தணிக்கையை திறம்பட மேற்கொள்வதற்கு, அனைத்து மின் மாற்றிகளிலும் அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்படும். சென்னை திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் பகுதி அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தியாகராய நகர் பகுதியில் 1.41 இலட்சம் நுகர்வோர்களுக்கு ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. சென்னை நகரின் பிற பகுதிகளுக்கும் இந்த ஸ்மார்ட் மீட்டர்கள் படிப்படியாகப் பொருத்தப்படும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் நிதி நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றது. உதய் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடன் பொறுப்பு மாநில அரசால் ஏற்கப்பட்டது. இக்கடன் தொகை, 5 ஆண்டு காலத்தில் அந்நிறுவனத்திற்கு அரசு மானியம் வழங்குவதன்மூலம் திரும்பச் செலுத்தப்படவுள்ளது. அதன் நான்காவது தவணை மானியமான 4,563 கோடி ரூபாய் 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு கடந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டத்தில் 50 சதவீதத்தை ஈடு செய்வதற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4,265.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரு கழகங்களின் நிதி மற்றும் இயக்க செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு விரிவான ஆய்வை மேற்கொள்ள அரசு நிதியுதவி வழங்கும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 20,115.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கு அதிமுக்கியத்துவம்

2020 பிப்ரவரி 14]  [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அளித்து வருகிறது. எனவே, அனைத்துத் துறைகளுடன் ஒப்பிடும்பொழுது பள்ளிக் கல்வித் துறைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல்திறன் தரக் குறியீட்டின்படி அணுக்கமான பள்ளி வசதியை வழங்குவதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்பதைப் பதிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கக் கல்வியில் மாணவர் நிகர சேர்க்கை விகிதம் 99.88 சதவீதத்தை எட்டியுள்ளது மற்றும் இடைநிற்றல் விகிதம் 0.8 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 30,104 ஆகக் குறைந்து, அவர்களில் 29,740 குழந்தைகள் தற்போது பள்ளியில் சேர்க்கப்பட்டுவிட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

புத்தகப் பைகள், பள்ளிச் சீருடைகள், காலணிகள், குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் மற்றும் வண்ணப் பென்சில்கள் ஆகிய படிப்புக்குத் தேவையான பொருட்களை விலையின்றி வழங்குவதன்மூலம், குழந்தைகளை பள்ளியில் தக்கவைப்பதை அரசு உறுதி செய்கிறது. இதற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 1,018.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கும் அரசால் மடிக்கணினி வழங்கப்படும். இதற்கென, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 966.46 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் பிற வசதிகளை அமைப்பதன்மூலம் பள்ளி உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படுகிறது. 158 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 277.88 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ள நபார்டு வங்கி அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. நபார்டு வங்கித் திட்டங்களுக்காக, 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 258.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தர ஆய்வில், பள்ளிகளில் பாதுகாப்பான குடிநீர் வசதி வழங்கும் பிரிவில், தமிழ்நாடு சிறந்து

விளங்கும் மாநிலம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர்கள் பள்ளியில் இருத்தல், அவர்களின் ஈடுபாடு மற்றும் தரமான கற்பித்தலே, மாணவர்களின் கற்றல் தரத்தை மேம்படுத்தும். தமிழ்நாட்டில் மாணவர், ஆசிரியர் விகிதம், இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட விகிதத்தைக் காட்டிலும் போதுமான அளவில் உள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிகளில் ஆசிரியர்களின் வருகையை உறுதிசெய்யும்பொருட்டு, ஆதாருடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 520.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்படுகின்றன. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் முறையில் கற்பிக்க, தகவல் தொடர்பு தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்திட பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அருகில் உள்ள பிற பள்ளிகளுக்கு எடுத்துக்காட்டாக அமையும் வகையில், செயல்முறை விளக்கப் பள்ளிகளாக 120 மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமான ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 3,202.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் ஆகியவற்றின்கீழ் நீண்ட காலமாக கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையான 3,201.30 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 12(1)(சி)-ஐ மிகவும் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. நடப்புக் கல்வியாண்டில் 76,927 மாணவ, மாணவியர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரை, 644.69 கோடி

ரூபாய் பள்ளிக் கட்டணம் திருப்பியளிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்த 304.14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**உயர் கல்வி**

அனைவருக்கும் உயர் கல்வி கிடைப்பதை உறுதி செய்வதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 2019-2020 ஆம் ஆண்டு வரையில், 30 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 27 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2019-2020 ஆம் ஆண்டில், 14 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக, 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து 2018-2019 ஆம் ஆண்டு வரையில், 21 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து 4 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்ற 2011-2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 1,577 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏழை மாணவர்களும் உயர் கல்வியினைப் பெறும் வகையில், முதல் தலைமுறை மாணவர்களின் கல்விக் கட்டணச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 506.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-05

கோயம்புத்தூரிலுள்ள அரசு பொறியியல் கல்லூரி இந்த ஆண்டு 75 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்த நிகழ்வைப் போற்றும் வகையில், கோயம்புத்தூரிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை தரம் உயர்த்துவதற்காக, 10 கோடி ரூபாய் சிறப்பு மானியத்தை அரசு அளிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமின்றி, இக்கல்லூரி மேலும் வளர்வதை விரும்பி, தாமாக முன்வந்து நிதிக்கொடை அளிக்க விரும்பும் புகழ்பெற்ற பல முன்னாள் மாணவர்களைப் பெற்றுள்ளது. 75 ஆம்

ஆண்டு விழாவின்போது, கல்லூரியின் வளர்ச்சிக்காக, முன்னாள் மாணவர்களால் அளிக்கப்படும் பங்களிப்பிற்குச் சமமான பங்களிப்பினை அரசும் வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு 91.50 கோடி ரூபாய் தொகுப்பு மானியமாக அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அதன் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு ஏதுவாக 225.78 கோடி ரூபாய் அளிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிக ஓய்வூதிய நிதிச் சுமையை எதிர்கொண்டுள்ளதால், மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வூதிய நிதிக்கு சிறப்பு நல்கையாக 11.72 கோடி ரூபாய் அளிக்கப்பட உள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உயர் கல்வித் துறைக்கு 5,052.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆதரவில் சென்னையில் 1993 ஆம் ஆண்டு சென்னை பொருளியல் பள்ளி (Madras School of Economics) அமைக்கப்பட்டு, அதற்காக கோட்டூர்புரத்தில் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இக்கல்வி நிறுவனம் புகழ்பெற்ற பொருளியல் கல்வி நிறுவனமாக வளர்ந்துள்ளதுடன், இந்தியாவில் உள்ள பொருளாதாரத்தில் உயர் கல்வி அளிக்கும் நிறுவனங்களிலும் ஒன்றாக விளங்குகிறது. இந்நிறுவனத்தின் பெருமையை அங்கீகரிக்கும் விதமாகவும், சுயமாக பட்டங்களையும், பட்டயங்களையும் வழங்க வழிவகை செய்யும் வகையிலும், அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் (Institute of Special Importance) என்ற தரநிலையை அந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கான சட்டம் இயற்றப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

நாட்டிலேயே சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் விளைவாக, 2010 ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகளுக்கு 24 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம், 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவிற்கு 16 ஆகக் குறைந்துள்ளது. மாநில அரசின் புள்ளிவிவரங்களின்படி, 2010-2012 ஆம் ஆண்டு காலத்தில் ஒரு இலட்சம் உயிர் பிறப்புகளுக்கு 90 ஆக இருந்த தாய்மார்கள் இறப்பு விகிதம், 2015-2017 ஆம் ஆண்டு

காலத்தில் 63 ஆகக் குறைந்து, 2019 ஆம் ஆண்டில் இது மேலும் 57 ஆகக் குறைந்துள்ளது. நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்கு 2030-ன்படி, ஒரு இலட்சம் உயிர் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 70 என்ற இலக்கு பல ஆண்டுகளுக்கு முன்கூட்டியே எய்தப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், தகுதிவாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீதம் பிரசவங்கள் மருத்துவமனையில் நடைபெறுவது, இத்திட்டத்தின் மகத்தான வெற்றியை சுட்டிக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில், 65 சதவீத பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 60.64 இலட்சம் ஏழை கர்ப்பிணித் தாய்மார்கள் 6,033.81 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர். மத்திய அரசின் மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டமான பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், மாநில அரசின் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து 23.10 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தினைச் செயல்படுத்த 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 959.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-10

தமிழ்நாடு அரசின் பொது சுகாதார முறையின் மூலமாக, தொடக்க மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ சேவைகளைத் தரமாக வழங்குவதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது. மாநிலத்தில் உள்ள ஆரம்பம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதார நிலையங்களுக்கான வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வலுப்படுத்தும். அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும், குறிப்பாக தொற்றா நோய்களின் மேலாண்மையை வலுப்படுத்தவும், ஏற்றத்தாழ்வின்றி, சமமான தாய்-சேய் சுகாதார சேவைகளை வழங்கவும், 2,857 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 260.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேகமாகப் பரவி 25 நாடுகளைப் பாதித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றுநோயை ஒரு சர்வதேச பொது சுகாதார நெருக்கடி நிலை என்று உலக சுகாதார மைய அமைப்பு (WHO) அறிவித்துள்ளது. தேசிய வழிகாட்டுதல்களை தமிழ்நாடு அரசு பின்பற்றி, நோய்க் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தேவையான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், முகமூடி மற்றும் மூன்று அடுக்கு முகமூடிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொள்முதல் செய்து கையிருப்பில் வைத்துள்ளது. முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியுதவிகள் வழங்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தரமான உயர்நிலை மருத்துவ சிகிச்சைகளை அனைத்துப் பிரிவு மக்களும் சமமாகப் பெறவேண்டும் என்பதற்காக, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், 1.59 கோடி குடும்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், திட்டம் தொடங்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை, 41.12 இலட்சம் பயனாளிகள் 6,601.59 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், அரசு மருத்துவமனைகள் 2,453.22 கோடி ரூபாய் பெற்று, அதைக்கொண்டு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன், மத்திய அரசின் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு, காப்பீட்டுத் தொகை ஆண்டிற்கு 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காக 1,033.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தரமான தமிழ்நாட்டு மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும், சுகாதாரத் துறையில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்கான முக்கியக் காரணம் ஆவர் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க

*வேண்டும் என்பது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தளராத முயற்சிகளின் விளைவாக, முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்டங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகளை 3,575 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் ஒரே ஆண்டில் நிறுவிட மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி பெற்றுள்ளது என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், இந்த 11 மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்காக 1,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொண்டு, அது, கடலூர் மாவட்டத்திற்கான அரசு மருத்துவக் கல்லூரியாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன், மொத்தம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம், நகர்ப்புறங்களில் உள்ள 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 10 மாவட்ட மற்றும் மாவட்ட துணை மருத்துவமனைகளுக்கு கட்டடங்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும். இதற்கென 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 510.15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 15,863.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*பிற்பகல் 12-15*

**தொழிலாளர் நலன்**

*தமிழ்நாடு தொழில் உறவுகளை எப்பொழுதும் சுமூகமாகப் பேணி வருகிறது. தொழிலாளர்கள் பிரச்சினை உடனடியாகத் தீர்வு செய்யப்படுவதை தொழிலாளர் நலத் துறை உறுதி செய்கிறது. 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களும் தொடர்ந்து*

*சிறப்பாகச் செயல்பட்டு, 2019 ஆம் ஆண்டில், 2,63,189 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 4.32 இலட்சம் பயனாளிகளுக்கு 241.94 கோடி ரூபாய் உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 149.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 5.44 கோடி ரூபாய் செலவில் 25,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் காலணிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள், பிரதிபலிப்பு ஜாக்கெட்டுகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடிகள் ஆகிய பாதுகாப்பு உபகரணங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளது. அனைத்து தகுதியான கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும். 2020-2021 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் 20 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.*

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி**

*தமிழ்நாட்டின் இளம் மக்கள்தொகை சார் ஆதாயத்தினை (*Demographic Dividend*) சரியான முறையில் பயன்படுத்திடும் வகையில், திறன் மேம்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முக்கியத் துறையாகக் கருதி வருகிறது. சென்னை மாநகரில், கிண்டியில் அமைந்துள்ள மாநிலத் தொழில் நெறி வழிகாட்டு மையம் மற்றும் மெய்நிகர் கற்றல் வழி இணையதளம், மின்-பொருளடக்கம் மற்றும் மின்-புத்தகங்கள் வழியாக மின்-கற்றலுக்கு உதவிபுரிந்து இதன் வாயிலாக 2.15 இலட்சம் நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.*

*2019-2020 ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், செம்போடை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் பாரத் பெட்ரோலியம் நிறுவனம் மற்றும் பவர்கிரிட் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இரண்டு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில், சிப்காட் மற்றும் இதர நிறுவனங்களின் பங்களிப்பில் 15 கோடி ரூபாய் செலவில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படும். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், வழக்கற்றுப் போன படிப்புகள் நீக்கப்பட்டு, தொழில் துறையினரின் தேவைக்கேற்ற பயிற்சிகளை வழங்கும் பிரிவுகளைச் சேர்த்து, 17.80 கோடி*

ரூபாய் செலவில் தொழிற்பிரிவுகள் முழுமையாக மாற்றி அமைக்கப்படும். தொழிற்பயிற்சி நிலையங்களில் 4.77 கோடி ரூபாய் செலவில், தகுதிவாய்ந்த நபர்களுக்கு மின்-வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை இந்தியாவிலேயே முதல்முறையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கியுள்ளது. ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் மேம்பாட்டிற்கான தேவையை நிறைவு செய்யும் வகையில், தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு சென்னையில் மாநிலத் திறன் பயிற்சி நிலையம் 1.60 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

திறன் இடைவெளி குறித்த ஆய்வின் அடிப்படையில், மோட்டார் வாகனங்கள், சுகாதாரம், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை, தோல் மற்றும் தோல் பொருட்கள், அழகுக் கலை, பொருட்கள் நகர்வு மேலாண்மை, ஆபரணத் தொழில் மற்றும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆகிய முக்கியத் தொழில் பிரிவுகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பயிற்சியளித்து வருகிறது. இளைஞர்கள் தங்களின் திறனை சுய மதிப்பீடு செய்துகொள்ள வகைசெய்யும் ஊடாடலுடன் (Interactive) கூடிய வலைதளம் ஒன்றை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ளது. பிரதம மந்திரியின் திறன் வளர்ப்புத் திட்டத்தின் (2.0)கீழ் 69,736 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. அம்மா திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 25,000 இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 20,000 இளைஞர்களுக்கு குறுகியகால திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. ஏற்கெனவே கற்றுக்கொண்டுள்ள திறமையை அங்கீகரிக்கும் வெற்றிகரமான திட்டத்தின்கீழ், இதுவரை 58,776 நபர்களுக்கு திறன் சான்றிதழை வழங்கியுள்ளது.

அரசு-தனியார் பங்களிப்பில் தமிழ்நாட்டில் ஐந்து உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து, தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திரக் கருவிகள் மற்றும் மருத்துவம் மற்றும் சுகாதார நலன் ஆகிய மூன்று பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டுமானம் மற்றும் வங்கியியல், நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறைகளில் மேலும் இரண்டு உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும். 20.32 கோடி ரூபாய் செலவில், தரமான பயிற்றுநர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை உருவாக்குவதற்கான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

மத்திய அரசின் சங்கல்ப் (SANKALP) திட்டத்தையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் துறை**

இந்தியாவிலேயே முதலீடுகளை மிக அதிக அளவில் ஈர்க்கும் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்தாகிய முதலீட்டு ஒப்பந்தங்களை நடைமுறைக்கு கொண்டு வருவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தனிக்கவனம் செலுத்தியுள்ளது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி ஈடுபாட்டினாலும், இங்கிலாந்து, அமெரிக்கா, துபாய் போன்ற வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட வெற்றிகரமான அரசுமுறைப் பயணத்தினாலும், பல புதிய முதலீடுகளை இம்மாநிலம் ஈர்த்துள்ளது. ஜனவரி மாதம் 2020 ஆம் ஆண்டில், 32,405 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், 52,075 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரையில், தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய தனிப்பட்ட முதலீடாக, குவைத் நாட்டைச் சார்ந்த அல் கெப்லா அல் வட்யா (Al Qebla Al Watya) குழுமம், தூத்துக்குடி அருகில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை மற்றும் பெட்ரோலியம் வேதிப்பொருட்கள் தயாரிப்பு வளாகத்தை 49,000 கோடி ரூபாய் செலவில் அமைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முதலீடு, அதைச் சார்ந்த உபதொழில்களுக்கு குறிப்பிடத்தக்க பயன் அளிப்பதுடன், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெருமளவு வேலைவாய்ப்பினையும் உருவாக்கும்.

பிற்பகல் 12-20

பொருட்கள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைக்கு தகுந்தவாறு முதலீட்டாளர்களுக்கு ஊக்கத் தொகைகளை வழங்க, புதிய தொழில் கொள்கையை, தமிழ்நாடு அரசு விரைவில் வெளியிடும். மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் தமிழ்நாட்டை மின்சார வாகனங்கள், உதிரி பாகங்கள், மின்ஏற்று உபகரணங்கள் தயாரிப்பு மையமாக உருவாக்குதல் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களுடன், மிகவும் முற்போக்கான, தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கையை, 2019 ஆம் ஆண்டில் மாண்புமிகு

*2020 பிப்ரவரி 14]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*அம்மா அவர்களின் அரசு வெளியிட்டது. பயிர் செய்யத்தக்க நிலங்களின் பரப்பு, தொழில் வளர்ச்சியினால் பாதிப்படையக் கூடாது என்பதனால், தொழில் துறை உபயோகத்தில் உள்ள நிலங்களின் நிலப் பயன்பாட்டை மேம்படுத்த, மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கான தரைதளக் குறியீடு ஒன்றிலிருந்து ஒன்றரையாகவும் மற்றும் மனை பரப்பளவு 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.*

*சென்னை–பெங்களூரு தொழில்வழித்தடத் திட்டத்தின்கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் 21,966 ஏக்கர் பரப்பளவில் பொன்னேரி தொழில்முனைய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மாநில அரசின் ஆதரவு வழங்கும் ஒப்பந்தத்திற்கும், பங்குதாரர்களின் ஒப்பந்தத்திற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரை பொருளாதாரப் பெருவழிச்சாலை திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். காட்டுப்பாக்கம் அருகே ஜி.எஸ்.டி. சாலையில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஃபின்டெக்சிட்டி அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தொடங்கியுள்ளன. சென்னையில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான முன்சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு, விமான நிலையத்திற்கான ஆயத்த வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (*SIPCOT*), ஏறத்தாழ 33,775 ஏக்கர் பரப்பளவில் 23 தொழில் வளாகங்கள், 7 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. மொத்தம் 1.14 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் 6.48 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 2,631 தொழில் நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 4,457 ஏக்கர் நிலம் உடனடி ஒதுக்கீட்டிற்குத் தயார் நிலையில் உள்ளது. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் தொழிற்பூங்காக்களில் தற்போது இயங்கிவரும் நிறுவனங்களின் பயன்படுத்தப்படாத மனைப் பரப்பை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காக, உள்குத்தகைக் கட்டணம் மற்றும் நிருவாக மாற்றக் கட்டணம் ஆகியவை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், மதுரை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 தென் மாவட்டங்கள் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் 16,725 ஏக்கர்*

பரப்பளவில் கூடுதலாக புதிய தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் தொழிற்பூங்காவிற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன. புதுமை முயற்சிகளை தொடக்க நிலையிலேயே ஊக்குவிக்க, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழான நிதியுதவியுடன், 53.44 கோடி ரூபாய் செலவில், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூரில் தொழில் புதுமை முயற்சி மையங்களை நிறுவும் பணிகளை தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ளும். 34.81 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வர்த்தக எளிதாக்குதல் மையம் ஒன்று சிறுசேரியில் உருவாக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி தொழிற்பூங்கா மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை சுத்திகரிக்கும் ஆலையை, 634 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (SIPCOT) நிறுவும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் (TIDCO), ஹெச். எல்.எல். லைஃப் கேர் நிறுவனமும் (HLL Life care Ltd) இணைந்து 205 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கல்பட்டிற்கு அருகில் ஒரு மருத்துவப் பூங்காவை நிறுவிட உத்தேசித்துள்ளன என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 10 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய சிமெண்ட் ஆலையை அரியலூரில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM) தொடங்கி, தற்போதைய உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் தொழில் துறைக்கான ஊக்கத் தொகை வழங்குவதற்காக 2,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-25

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. 2.51 இலட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீட்டில், 1.42 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிற 22.21 இலட்சம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை, 2.07 இலட்சம் தொழில்முனைவோர்கள்,

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

13.38 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய, 27,764 கோடி ரூபாய் முதலீடுகளை இத்துறையில் செய்வதற்கு உத்யோக் ஆதார் பதிவறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்களை விரிவுபடுத்தும் வகையில், தற்போதுள்ள திட்ட முதலீட்டிற்கான வரம்பு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படுவதுடன், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தகுதி வாய்ந்த மானியத்தின் வரம்பும் 1.25 இலட்சம் ரூபாயிலிருந்து 2.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஆயிரக்கணக்கான வளர்ந்துவரும் தொழில்முனைவோர் ஊக்கம் பெறுவார்கள். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 33 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு அரசின் தொழில்முனைவோருக்கான முன்னோடித் திட்டமாகும். 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், இத்திட்டத்தின் கீழான திட்டச் செலவு வரம்பு ஒரு கோடி ரூபாயில் இருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், 2018 ஆம் ஆண்டில், அதிகபட்ச மூலதன மானியம் 25 இலட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாயாக மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்படும் அதிகபட்ச மூலதன மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக அரசு உயர்த்தி வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கும் கடனுக்கான வட்டி மானியத்தை 3 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக உயர்த்தி

வழங்குவதாக அறிவித்திருந்தார். தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதிக் குழுமத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வட்டி மானியம் தொடர்ந்து 3 சதவீதமாகவே இருந்து வருகிறது. இந்த இரண்டு திட்டங்களுக்கான வட்டி மானியங்களும் 3 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக உயர்த்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போது இயங்கிவரும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், குழும வளர்ச்சி அணுகுமுறையில் பொது வசதி மையங்களை உருவாக்கவும், மத்திய அரசின் குழும வளர்ச்சித் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. மேலும், 33.70 கோடி ரூபாய் செலவில் பிடாநெரி, பெரிய நெசலூர், ஊத்தங்கரை மற்றும் மரிக்குண்டு ஆகிய இடங்களில் நான்கு புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குருக்கல்பட்டி மற்றும் பெருந்துறையில் இரண்டு புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம், புத்திரகவுண்டன்பாளையம் கிராமங்களில் 4.50 கோடி ரூபாய் செலவில் புதிய தொழிற்பேட்டை நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2019-2020 ஆம் ஆண்டில், 95.48 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஆறு பொது வசதி மையத் திட்டங்களுக்கான இறுதி ஒப்புதல்களையும், 47.65 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 4 புதிய பொது வசதி மையங்களை உருவாக்குவதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலையும் மத்திய அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், இதுவரை மொத்தம் 13,626 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் 500 புதிய நிறுவனங்கள் உருவாக்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்ட செயல்பாடுகளுக்காக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்காக 607.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-30

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையை அடுத்து, அதிக வேலைவாய்ப்பினை வழங்கும் துறையாக ஜவுளித் துறை உள்ளது. கைத்தறி விற்பனையை ஊக்குவிப்பதற்காக செயல்படுத்தப்படும் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2018-2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கைத்தறி உதவித் திட்டம், 2020-2021 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடர்ச்சியாக செயல்படுத்தப்படும். இதற்கென, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கான மானியத் தொகையாக 360.33 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் நாளன்று, தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளி கொள்கை, 2019-ஐ வெளியிட்டார்கள். புதிய முதலீடுகளை ஈர்த்தல், தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்குவித்தல், திறன் இடைவெளியை நிரப்புதல், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், ஜவுளித் தொழிலாளர்களுக்கு மேலும் சிறப்பான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருதல் மற்றும் சுற்றுச்சூழல் தர நிர்ணயத்தைப்பேணுதல் ஆகியவை இக்கொள்கையின் முக்கியமான அம்சங்களாகும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய ஜவுளிக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட கூடுதல் ஊக்கத்தொகை வழங்குவதற்காக 48.02 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், கைத்தறி மற்றும் ஜவுளித் துறைக்கு மொத்தம் 1,224.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

**தகவல் தொழில்நுட்பவியல்**

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), பொருட்களின் இணையம் (Internet of Things), நம்பிக்கை இணையம் (Blockchain), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) போன்ற புதுமையான தொழில்நுட்பங்களை நிருவாகத்தில் பயன்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தனிக்கவனம் செலுத்தும். நிதி தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டை முன்னணி மையமாக உருவாக்க வேண்டும் என்ற இலக்குடன், 23 கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில், நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் ஒன்றினை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 5.75 கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. அதிகரித்துவரும் புதிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு, தேவையான இட வசதியை வழங்கும் விதமாக, தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் கோயம்புத்தூரில் 100 கோடி ரூபாய் செலவில் 2.50 இலட்சம் சதுர அடி கூடுதல் அலுவலக பரப்பு மற்றும் திருச்சியில் 40 கோடி ரூபாய் செலவில் 1 இலட்சம் சதுர அடி கூடுதல் அலுவலக பரப்பு நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொழில்நுட்பவியலின் ஆற்றலை ஆளுமைத் திறன் மேம்பாட்டிற்கு பயன்படுத்துவது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உருவாக்கியுள்ள தமிழ்நாடு வெளிப்படை அரசு தரவுதளத்தின் வாயிலாக, பல்வேறு அரசுத் துறைகளின் வெவ்வேறு தரவுத் தொகுப்புகள் பொதுமக்களுடன் பகிரப்படுகிறது. பொதுமக்களுக்கு இந்த தகவல்கள் வெளிப்படையாக தெரிவிக்கப்படுவதன்மூலம், அவர்கள் அரசு சேவை வழங்கலை மேம்படுத்த உரிய ஆலோசனைகளை வழங்கவும், தகவல்களை பயன்படுத்த தேவையான செயலிகளையும் உருவாக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், தரவுகளின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், முதலமைச்சரின் முகப்பு பக்கத் திட்டம் (CM Dashboard Project) 5.02 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முன்கணிப்பு ஆளுமைத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளுக்கு, ஆறு கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெறாத நிலையிலும், அவர்களுக்குத் தேவையான சேவைகளை கண்டறிந்து வழங்க இயலும்.

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழ்நாட்டின் மாநில குடும்பத் தரவுதளம் உருவாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அரசு சேவைகளை தங்குதடையின்றி வழங்கவும், அனைத்து அரசுத் துறைகளுக்கும் ஒரே மாதிரியான தரவுகள் கிடைப்பதையும், மாநில குடும்பத் தரவுதளம் உறுதி செய்யும். சரியான தகவல்களின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுக்க உதவக்கூடிய இந்த இலட்சிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 47.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணினிமயமாக்கம் மற்றும் இணையவழி தரவு பெறுதலில் முக்கியமான அம்சம், தரவு தனியும் (Privacy) மற்றும் பாதுகாப்பும் ஆகும். 21.39 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்காக மொத்தம் 153.97 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

உள்ளூர்ப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது. இந்தியாவிலேயே அதிகமான வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை 2014 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு தொடர்ந்து ஈர்த்து வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்திற்கு, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 90.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-35

தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவித்தல் திட்டத்தின்கீழ், 295 சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்துவதற்கு கண்டறியப்பட்டு, அவை ஆறு சுற்றுலாச் சுற்றுகளாக வகுக்கப்பட்டுள்ளன. விரிவான பகுதி மேம்பாட்டு அணுகுமுறையை கடைப்பிடித்து, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் சுற்றுலாத் தலங்களில் செய்து தருவதற்கு பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். பழமையான தமிழ்நாட்டின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தைத்

தூண்டும் புதிய வகையில் காட்சிப்படுத்துவதன்மூலம், மேலும் அதிக சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கப்படுவர். அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாடு, வணிக ரீதியிலான விருந்தோம்பல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் உட்பட இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவு மதிப்பீடு 2,000 கோடி ரூபாயாகும். இத்திட்டத்திற்கு, அரசு, தனியார் பங்களிப்பு முறையில் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியம் மற்றும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து நிதி திரட்டப்படும்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன அதிபர் அவர்களும், அண்மையில் மாமல்லபுரத்திற்கு வருகைபுரிந்ததை அடுத்து, மாமல்லபுரத்தின் சுற்றுலா மேம்பாட்டிற்கு ஊக்கமளிப்பதற்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்று 563.50 கோடி ரூபாய் மொத்த செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதேபோன்று, 9.80 கோடி ரூபாய் செலவில் இராமேஸ்வரத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசுகள் வகுக்கும் சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், மத்திய அரசின் நிதியுதவி பெறப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இந்து சமய அறநிலையத் துறை

2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 11,365 திருக்கோயில்களுக்கு 542.73 கோடி ரூபாய் செலவில் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. 'ஒரு கால பூஜை' திட்டத்தினால் 12,745 திருக்கோயில்கள் பலன் பெற்றுள்ளன. 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 6,741 திருக்கோயில்களின் திருப்பணிகள் 49.21 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன், 5,847 கிராமப்புறக் கோயில்களின் திருப்பணிகள் 42.11 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 858 திருக்கோயில் குளங்கள் 4.69 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டுள்ளன. 1,125 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 7,233.76 ஏக்கர் நிலங்கள், 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றின் பட்டாக்கள் கோயில்களின் பெயரிலேயே மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை

மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்காக 281.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப் பணித் துறை கட்டடங்கள்**

மாநிலம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான அரசுக் கட்டடங்களை பொதுப் பணித் துறையின் கட்டடங்கள் பிரிவு பராமரித்து வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் புதிய கட்டடங்களின் கட்டுமானப் பணிகளுக்காக, 1,453.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல அரசு அலுவலகங்கள் பாரம்பரியம் மிக்க கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்காக, இனிவரும் காலங்களில், ஆண்டுதோறும் சிறப்பு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என்று இந்த அவைக்கு அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதற்கென, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டையிலுள்ள தாடண்டர் நகரில் 74 ஏக்கர் பரப்பளவில், அரசு ஊழியர்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில், பொதுப் பணித் துறையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் குடியிருப்புகளை உருவாக்கிப் பராமரித்து வருகின்றன. குடியிருப்பு வளாகத்தின் வடிவமைப்பை மேம்படுத்திடவும், மேலும் சிறப்பான வசதிகளை ஏற்படுத்தித் தரவும் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். இத்துடன் கூடுதலாக, அரசு ஊழியர்களின் வாடகை வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கு, பொதுப் பணித் துறையின்மூலம் சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேலும் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு அமைக்கப்படும். இக்குடியிருப்புகளில் 24 கோடி ரூபாய் செலவில் குடியிருப்போருக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-40

**சமூக நலன்**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய நல்வழியில்,

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாலின சமத்துவம், நீதி ஆகியவற்றை பாதுகாப்பதில் முனைப்பாக செயல்படுகிறது. இதன் விளைவாக, மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் குழந்தைகள் நலனை உறுதி செய்தல், அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகள் நலன் ஆகியவற்றை இலக்காக கொண்ட பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் பலனாக 2014-2015 ஆம் ஆண்டில் 918 ஆக இருந்த பாலின பிறப்பு விகிதம், 2019 ஆம் ஆண்டில் 936 ஆக உயர்ந்துள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டங்களுக்கு 140.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களினால், 2019-2020 ஆம் ஆண்டில் 1,04,795 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக, 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின்கீழ், இதுவரை 1.88 இலட்சம் பணிபுரியும் மகளிருக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் 253.14 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பணிபுரியும் மகளிர் விடுதிகளை நிருவகிப்பதற்கு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் என்ற சிறப்பு நோக்க முகமையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புதிய நிறுவனம், பணிபுரியும் மகளிர் விடுதிகளை நிருவகிக்கும். சென்னையில் 8 இடங்களிலும், கிருஷ்ணகிரி, திருச்சி, ஓசூர், காஞ்சிபுரம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் தலா ஓர் இடத்திலும், மொத்தம் 13 இடங்களில் இத்தகைய விடுதிகளை அமைப்பதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் பாலின சமத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டு அட்டவணையின்படி, 2020-2021 ஆம் ஆண்டில் மகளிர் நலத் திட்டங்களுக்காக மொத்தம் 78,796.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

43,243 மதிய உணவு மையங்களில் செயல்படுத்தப்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், நாள்தோறும் 48.57 இலட்சம் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 1,863.32 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மழலையர்

பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்கும், ஊட்டச்சத்து குறைபாடு அற்ற மாநிலமாக தமிழ்நாடு இருப்பதை உறுதி செய்வதற்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், குழந்தைகளின் ஆரம்பகால கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,535.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடினமான சுற்றுச்சூழலில் பரிதவிக்கும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முயற்சி செய்யும். தற்போது புதிதாக வகுக்கப்பட்டுவரும், தமிழ்நாடு மாநில குழந்தை நலன் கொள்கை விரைவில் வெளியிடப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு 175.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதியோர்களை அக்கறையுடன் கவனிப்பது நமது சமுதாயத்தின் மரபாகும். கல்வி மற்றும் பணித் தேவையின் காரணமாக இடம் பெயர்வதாலும், தனிக் குடும்ப விருப்பம் மக்களிடையே அதிகரித்து வருவதாலும், தமிழ்நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்களில் முதியோர்கள் தனித்து விடப்படுகின்றனர். ஆதலால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஜெ-பால் (J-PAL) மையத்துடன் இணைந்து, நோபல் பரிசு பெற்ற முனைவர் எஸ்தர் டஃப்லோ அவர்களின் தலைமையிலான ஒரு குழுவைக் கொண்டு, முதியோர் பிரச்சினைகள் தொடர்பான நீண்ட கால ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், முதியோர் நலனுக்கான பல முன் முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கும். இதன் முன்னோட்டத் திட்டமாக, 37 மாவட்டங்களிலும் உள்ள தலா 2 வட்டாரங்களில், 37 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் முதியோர் ஆதரவு மையங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூக நலன் மற்றும் மதிய உணவுத் திட்டத்திற்காக 5,935.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நிலைக்கத்தக்க பொருளாதார முன்னேற்றத்தை அடைவதையும், அவர்களுக்கு சமூக நீதியை உறுதி செய்வதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் முதன்மையான நோக்கமாகும். கல்வியறிவே மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை உருவாக்கித் தரும். எனவே, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4,109.53 கோடி ரூபாய் மொத்த நிதியில், 2,018.24 கோடி ரூபாய் அவர்களின் கல்வித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கான 'பெண் கல்வி சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டம்' 49.60 கோடி ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உயர் கல்வி ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ், மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொகை மிக அதிகமாக உயர்த்தப்பட்டு, 1,526.46 கோடி ரூபாய் எட்டியுள்ள நிலையில், மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கு அளிக்கப்படும் தொகை கணிசமாகக் குறைந்துள்ளது. ஏனைய திட்டங்களைப் போன்று உயர்கல்வி உதவித்தொகை திட்டத்திலும் மத்திய மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் செலவினை ஏற்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மாநில அரசின் தளராத முயற்சிகளின் பலனாக, நிருவாக ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ள மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவதில், மத்திய அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகள் மாற்றப்பட்டு விதிமுறைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதால், மேலும் பல மாணவர்கள் உயர் கல்வி ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,949.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-45

ஆதி திராவிடர் மாணவர்களிடையே, கல்லூரி விடுதிகளுக்கான தேவை உயர்ந்து வருகிறது. ஆகையால், 2020-2021 ஆம் ஆண்டில் 16.30 கோடி ரூபாய் மதிப்பில் 15 விடுதிகள், கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்படும். ஆதி திராவிடர் விடுதிகளின் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு 6.89 கோடி ரூபாயிலிருந்து 15 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் விடுதிகள்

முறையாகப் பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்படும். நபார்டு வங்கி உதவியுடன், 106.29 கோடி ரூபாய் மொத்தச் செலவில் 223 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

2018-2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கூடுதலாக ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதி இதனுடன் இணைக்கப்படும். ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 23,425 பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்க தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் திட்டமிட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 135 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து கால நிலைகளுக்குமான வீடுகள், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சூரிய ஒளி விளக்கு வசதிகள், வீட்டு வசதி மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகள் போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும், அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளில் ஏற்படுத்துவதற்கு ஒரு சிறப்பு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்று தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்திற்காக, மாநிலத்திலுள்ள அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளிலும் விரிவான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, வீட்டு வசதிக்கான 265 கோடி ரூபாய் உட்பட, 660 கோடி ரூபாயில் விரிவானதொரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்ட நிதியின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில், வீடுகள் தேவைப்படும் அனைத்து 8,803 குடும்பங்களுக்கும், தலா 3,00,000 ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும். வீடு கட்டுவதற்கு ஆகும் செலவில், ஒரு வீட்டிற்கு கூடுதலாக ஆகும் செலவான 90,000 ரூபாய், பழங்குடியினர் நலத்திற்கான வரவு-செலவு ஒதுக்கீடுகளில் இருந்து ஒரு சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படும். நிதி ஒதுக்கீட்டின் எஞ்சிய 395 கோடி ரூபாய், அணுகு சாலைகள், தெரு விளக்குகள், சூரிய ஒளி விளக்கு வசதி மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்காக மூன்று ஆண்டுகளாகப் பிரித்து வழங்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 210 கோடி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் தொடங்கி நிறைவுறா பணிகளுக்கு நடப்பாண்டில் 40 கோடி ரூபாய் தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய, அவர்களுக்குத் தரமான கல்வி வசதிகளை வழங்க வழிவகை செய்ய வேண்டும் என அரசு நன்கு அறியும். இந்த சமூகத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக 302.98 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மற்றும் தொழிற்பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களுக்கு 3.63 இலட்சம் மிதிவண்டிகள் 142.84 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 1,348 விடுதிகளில் 85,314 மாணவ, மாணவிகள் தங்கியுள்ளனர். 2020-2021 ஆம் ஆண்டில் 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்படும். புதிய விடுதிக் கட்டடங்களின் கட்டுமானத்திற்காக 2019-2020 ஆம் ஆண்டில் 8.48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. மாணவ, மாணவிகளின் வருகையைப் பதிவு செய்ய அனைத்து விடுதிகளிலும் பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு முறை நிறுவப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக 1,034.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-50

**சிறுபான்மையினர் நலன்**

நிகழும் 2019-2020 ஆம் ஆண்டில், 3.64 இலட்சம் சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் 98.66 கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்கள் வாயிலாக ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ மகளிர் உதவி பெறுகின்றனர். கிறிஸ்துவ தேவாலயங்களின் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் நிதியுதவியை 1 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக அரசு உயர்த்தும்.

(மேசையைத் தட்டும் ஒலி) மசூதிகளின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவி 60 இலட்சம் ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர நிருவாக மானியம் 2.50 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டத்தை தமிழ்நாடு மிக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அரசு வேலைவாய்ப்புகளிலும் பொதுத் துறை நிறுவனங்களில் நடைபெறும் பணி நியமனங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், நிரப்பப்படாமல் நிலுவையிலுள்ள அனைத்து காலிப் பணியிடங்களுக்கும் சிறப்பு ஆட்சேர்ப்பு பணிகள் நடத்தப்படும். தற்போது, அறிவுசார் குறைபாடுகள் உடையோர், கடுமையாக ஊனமுற்றோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டோர், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு மானியமாக மாதம் ஒன்றிற்கு 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள 1.75 இலட்சம் நபர்கள் பயன்பெறும் வகையில் 313.26 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் மற்றும் பார்க்கின்சன் நோய், தண்டுவட மரப்பு நோய் ஆகிய நாட்பட்ட நரம்பியல் பாதிப்புக்கு உள்ளான நபர்களுக்கும் இனிமேல் மாதாந்திர பராமரிப்பு மானியம் வழங்கப்படும். புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவுகளுக்கும், உதவித்தொகை கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை ஒப்புதல் செய்வதற்கும், 2.1 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் பயன்பெறும் வகையில், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு 375 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோர், பிறரை எளிதில் தொடர்பு கொள்வதற்கு, தக்க செயலிகளுடன்கூடிய திறன்பேசிகள், 10,000 பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக 667.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் தேதி அன்று, 76.23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் துவக்கி வைக்கப்பட்ட 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தினால்' விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள், கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களிடையே மிகப் பிரபலமாகி, அவர்களைப் பெரிதாக உற்சாகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கூடுதல் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், டேபிள் டென்னிஸ், பாட்மிண்டன் மற்றும் விளையாட்டு உயிர் இயக்கவியலுக்கான (Sports Bio-mechanics) உயர்நிலை சிறப்பு மையங்கள் உட்பட உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதியுதவிகளை இந்த அரசு வழங்கியுள்ளது. இவற்றுடன், கனோயிங் மற்றும் கயாகிங்கிற்கான உயர்நிலை சிறப்பு மையங்களும் நிறுவப்பட உள்ளன. இந்த வசதிகளைப் பயன்படுத்தி, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய உயரிய செயல் திறன் மையம் உருவாக்கப்படும்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 218.66 கோடி ரூபாய் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பு (IFHRMS)

தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளும், பணியாளர்களும், ஓய்வூதியதாரர்களும், அரசிடம் இருந்து பணப் பலன் பெறக்கூடிய நபர் ஒவ்வொருவரும் பயனடையக்கூடிய மிகப் பெரிய மின்-ஆளுமைத் திட்டங்களுள், 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பும்' (IFHRMS) ஒன்றாகும். இத்திட்டம், மாநிலத்தின் அனைத்து 295 மாவட்டக் கருவூலங்கள் மற்றும்

சார் கருவூலங்கள், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்கள், 19,000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் அலுவலகங்களில் செயல்படுத்தப்படும். இந்த அமைப்பில், அரசின் அனைத்து பணம் செலுத்துகைகள் மற்றும் அனைத்துப் பணியாளர்களின் சம்பளங்கள், படிகள் மற்றும் பணிப் பதிவேடு விவரங்கள் மின்னணு முறையில் சேமிக்கப்படும். இத்தகைய பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்பத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, பல நிருவாக நடைமுறை மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அனைத்து தரவுகளையும் சரிபார்த்து உள்ளீடு செய்த பின்னரும், அனைத்துப் பயனாளர்களுடனும் கலந்தாலோசித்த பின்னரும், பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்த பின்னரே, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு முறையானது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுவதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்துள்ளது. சில காலங்கள் பழைய அமைப்பு முறையுடன் இணையாகச் செயல்படுத்திய பிறகே, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு முறை, 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கரூர் மாவட்டத்தில் தனி அமைப்பு முறையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் துல்லியமான, விரைவான நிதி மற்றும் மனிதவளப் பரிவர்த்தனைகளுக்கு உதவிகரமாக இருப்பதுடன், அனைத்து துறைகளிலும், கருவூலங்களிலும் தொடர்ந்து மீளும் பணிகளினால் ஏற்படும் வேலைப்பளுவையும் கணிசமாகக் குறைக்கும். இது அரசுத் துறைகளின் செயல்திறனை பெரிதும் மேம்படுத்துவதுடன், பணம் பெறுகையில் எழும் காலதாமதத்தைக் களைய வழி செய்கிறது.

பிற்பகல் 12-55

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பின் வரவு-செலவுத் திட்ட மேலாண்மை முறை முழுமையாக செயல்பட ஆரம்பித்த பின்னர், மாநில அரசின் வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிதி நிருவாகத்தை நவீனமயமாக்கி, நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிதி மேலாண்மைத் திறனை மேம்படுத்தக்கூடிய வாய்ப்பு உருவாகும். தமிழ்நாட்டின் வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் நிதி இடர் மேலாண்மை குறித்து மதிப்பீடு செய்து, ஆலோசனை வழங்க பன்னாட்டு நாணய நிதியத்திடம் (IMF) அரசு கோரியிருந்தது. அதன்படி, பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்பக் குழுவொன்று 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பினை நவீனமயமாக்கல் மற்றும் நிதி இடர் மேலாண்மை குறித்து ஆய்வு செய்து, தனது மதிப்பீட்டு அறிக்கையை அளித்துள்ளது. இந்த அறிக்கையை அரசு ஆய்வு செய்து, பன்னாட்டு நாணய நிதியின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் அதில் அடங்கியுள்ள பரிந்துரைகளை அமல்படுத்தும்.

**பொது நிதிநிலை ஆராய்ச்சி மையம்**

நாட்டின் ஒட்டுமொத்த பொதுச் செலவினங்களில் மாநில அரசுகளின் பங்கு பெருமளவு அதிகரித்து உள்ளதால், மாநிலங்களின் பார்வையில், குறிப்பாக தமிழ்நாட்டின் பார்வையில் பொது நிதிநிலை குறித்து ஆராய்ச்சி செய்வது அவசியமாகிறது. சிக்கலான பொருளாதாரச் சூழ்நிலையிலும், அரசின் நிதி நிலைமையைப் பராமரிப்பதற்காக, பொருளியலில் தனித்துவம் பெற்ற நிறுவனத்திடமிருந்து உயர்தரமான கொள்கை ஆலோசனைகளைப் பெறுவது பெரிதும் பயனளிக்கும். எனவே, சென்னைப் பொருளியல் பள்ளி (Madras School of Economics) தனது வளாகத்திற்கு அருகே, ஒரு பொது நிதிநிலை ஆராய்ச்சி மையம் (Centre for Public Finance) நிறுவிட அரசு ஆதரவு அளிக்கும். இந்த மையம், பொது நிதிநிலை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன், அரசின் கொள்கை வடிவமைப்பிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி, குறுகிய மற்றும் நீண்ட கால பாடத் திட்டங்களையும் நடத்தும். இம்மையத்தை அமைப்பதற்கு நிலம் மற்றும் 5 கோடி ரூபாய் மூலதன நிதியத்திற்கான மானியமாக அரசு வழங்கும்.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள்**

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டக் காப்பீட்டுக் கட்டணத் தொகை செலுத்துவதற்காக முறையே, 342 கோடி ரூபாய் மற்றும் 306.65 கோடி ரூபாய், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான நடைமுறைகளை எளிதாக்கும் வண்ணம், விரிவான வழிகாட்டுதல்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன்பணம் வழங்குவதற்காக 173.95 கோடி ரூபாய் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு 64,208.55 கோடி ரூபாயும், ஓய்வூதியதாரர்களுக்கு

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஓய்வூதியம் வழங்குவதற்காக 32,009.35 கோடி ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிரமமான நிதி நிலைமையிலும், அரசுப் பணியாளர்களுக்கான அகவிலைப் படியை உரிய நேரத்தில் ஒரே சீராக வழங்கி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பாகம்—ஆ

## வரவு-செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரையில் அரசின் முக்கியத் திட்டங்களையும் மற்றும் சிறப்பு முயற்சிகளையும் முன்னிலைப்படுத்தியுள்ளேன். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க நான் இப்போது விழைகிறேன். 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் கணக்கு குறித்த மொத்த செலவினம் 2,12,035.93 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. வருவாய் கணக்கில் கூடுதல் செலவினத்திற்காக 2,282.43 கோடி ரூபாய் மற்றும் 3,952.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு துணை மதிப்பீடுகள் இந்த அவையின்முன் வைக்கப்பட்டன. செலவினங்களின் போக்கினை கட்டுப்படுத்தி சில திட்டங்களில் சேமிப்பினை ஏற்படுத்த அரசு முயன்று வருகின்றது. எனவே, 2019-2020 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் வருவாய் செலவினத்தின் ஒட்டுமொத்த அளவு 2,16,932.51 கோடி ரூபாயாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-00

வருவாய் வரவினங்களில் பொருளாதார வளர்ச்சியின் காரணிகளான ஒரு சில துறைகளில் காணப்படும் மந்தநிலை காரணமாக மாநில அரசின் வரி வரவினங்கள், அதிலும் குறிப்பாக பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பிற்கு உட்படாத பொருட்களின் மீதான மதிப்புக் கூட்டு வரி மற்றும் மோட்டார் வாகன வரிகள் ஆகியன வரவு-செலவுத் திட்ட இலக்குகளைக் காட்டிலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில ஆயத்தீர்வை, முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் ஆகியவை வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவை வரியில் 2017-2018 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய 4,073 கோடி ரூபாய்

தொடர்பான நிலுவையில் உள்ள பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டு, நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட்டு விடும் என நாங்கள் நம்புகிறோம். ஒட்டுமொத்தமாக 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிர்ணயிக்கப்பட்ட 1,24,813.06 கோடி ரூபாயில், 2019-2020 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மாநில அரசின் சொந்த வரி வருவாய் 1,20,809.63 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டின் பங்காகப் பெறப்படும் மத்திய வரிகளின் நிதிப் பகிர்வு 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் வரலாறு காணாத வீழ்ச்சியைக் கண்டுள்ளதனால், பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் மத்திய வரிகளின் பங்காக, மத்திய அரசிடமிருந்து 30,638.77 கோடி ரூபாய் பெறப்பட்டது. அதையடுத்து, சென்ற 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்ட 2019-2020 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் 33,978.47 கோடி ரூபாய் வழங்கப்படும் என மத்திய அரசு குறிப்பிட்டிருந்தது. ஆனால், இதற்கு மாறாக, தற்போது 2019-2020 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் திருத்த மதிப்பீடுகளில் மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு மத்திய வரிகளில் வழங்கும் நிதிப் பகிர்வு 26,392.40 கோடி ரூபாய் மட்டுமே என்று குறைத்து குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வரி வசூல் எதிர்பார்த்த அளவைவிட 2019-2020 ஆம் ஆண்டில் குறைவாகவே வசூலாகியதாலும், 2018-2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட, உள்ளபடியான மத்திய வரி வசூல் குறைந்ததால், 2019-2020 ஆம் ஆண்டிற்கான மத்திய வரி வசூலில் தமிழகத்திற்கான பங்கில் 2,368 கோடி ரூபாய் குறைக்கப்பட்டதாலும், 2019-2020 ஆம் ஆண்டிற்கான மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்கில் மொத்தத்தில் 7,586.07 கோடி ரூபாய் குறைவு ஏற்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத இறக்கம், தமிழ்நாட்டின் நிதிநிலையை சிக்கலான சூழ்நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. மாநில அரசு தனது அத்தியாவசிய செலவினங்களை எதிர்கொள்ள மத்திய வரி நிதிப் பகிர்வு அல்லாத பிற நிதி ஆதாரங்களைக் கண்டறிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டதற்கு மேலாக வரியல்லாத வருவாயில் கூடுதல் வசூலை உறுதி செய்ததன் வாயிலாகவும், பல்வேறு திட்டங்களுக்காக மத்திய அரசிடமிருந்து மானியங்களை பெற்றதன்

2020 பிப்ரவரி 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வாயிலாகவும், இந்த இரு முக்கிய வருவாய் இனங்களின்மூலம் இப்பற்றாக்குறையை அரசு ஓரளவிற்கு சரி செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் மத்திய அரசுடன் மேற்கொண்ட சீரிய தொடர் நடவடிக்கைகளினால் இது சாத்தியமானது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசின் வரியல்லாத வருவாய் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 13,326.91 கோடி ரூபாயாக உள்ளதைக் காட்டிலும் அதிகரித்து 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 14,195.28 கோடி ரூபாயாக வசூலாகும் என கணிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25,602.74 கோடி ரூபாயாக உள்ளதைக் காட்டிலும் திருத்த மதிப்பீடுகளில் 30,463.57 கோடி ரூபாயை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக ஒட்டுமொத்த வருவாய்க் குறைவு மட்டுப்படுத்தப்பட்டு, 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவினங்கள் 1,91,860.88 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2019-2020 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 5,860.29 கோடி ரூபாய் குறைவானதாகும். அதிகரித்துவரும் செலவினங்கள் மற்றும் குறைந்து வரும் வருவாய் வரவினங்களை கணக்கில் கொண்டு, 2019-20 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த வருவாய் பற்றாக்குறை 2019-2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடான 14,314.76 கோடி ரூபாயிலிருந்து திருத்த மதிப்பீடுகளில் 25,071.63 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

பிற்பகல் 1-05

வளர்ச்சிக்கு வித்திடும் செலவினங்கள் எவ்விதத்திலும் பாதிப்பிற்குள்ளாகக் கூடாது என்பதை உறுதிசெய்யும் நோக்கத்தில், 2019-2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த மூலதனத்திற்கான ஒதுக்கீட்டினைக் குறைக்கக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகவும் கவனமாக உள்ளது. அதன்படி, திருத்த மதிப்பீடுகளில் மூலதன நிதி ஒதுக்கீடு 31,220.89 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 31,251.21 கோடி ரூபாய் அளவிலேயே உள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகளுக்கு உட்பட்டு, நிதிப் பற்றாக்குறை இருப்பதை உறுதி செய்வதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதிக கவனத்துடன் உள்ளது. 2019-2020 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 55,058.39 கோடி ரூபாய் அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிப் பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் முன்மதிப்பீடுகள் (தற்காலிகத்தின்) அடிப்படையில் 3 சதவீதத்திற்குள் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் வளர்ச்சியானது சற்று கவனமாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாயில் வணிக வரிகள் தொடர்ச்சியாக அதிக அளவில் வருவாயை ஈட்டித் தருகின்றன. பொருட்கள் மற்றும் சேவை வரிகளை அறிமுகப்படுத்தியதால் மாநில அரசின் வரி விதிப்புத் திறன் ஏற்கெனவே சுருக்கப்பட்டுள்ளது. பொருட்கள் மற்றும் சேவை வரி வலை அமைப்பில் தொடர்ந்துவரும் ஆரம்பகட்ட பிரச்சினைகள் மற்றும் இந்த அமைப்பு முறையுடன் இணக்கமாக செயல்படுவதில் மற்ற மாநிலங்களில் நிலவும் சூழ்நிலைகள் மற்றும் தேசிய அளவில் நிலவும் பொருளாதார வளர்ச்சியின் மந்த நிலை ஆகியவற்றால் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வளர்ச்சி குறைந்துள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வணிக வரிகளின் ஒட்டுமொத்த வசூல் தொகை 1,02,236.59 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாய் 8,133.81 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மோட்டார் வாகன வரி வருவாய் 6,897.73 கோடி ரூபாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டட விதிமுறைகள் மற்றும் பொது வளர்ச்சியை எளிமைப்படுத்துவதில் அரசால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகளின் அடிப்படையில், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வருவாய் மீண்டும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கிறோம். தமிழ்நாடு நில

உடைமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் உரிமைகளை முறைப்படுத்துதல் சட்டம் 2017 நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி, அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் கால நீட்டிப்பு செய்யப்பட்ட செப்டம்பர் 2020 ஆம் ஆண்டு, 19 ஆம் தேதிக்குள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். ஓர் ஆண்டுக்கும் குறைவாக உள்ள இனங்கள் உட்பட அனைத்து வாடகை ஒப்பந்தங்களுக்கும் இந்த புதிய வாடகை ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்வதன் முழு பயன்களை அடைவதற்கு நில உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் இருவருமே தாமாகவே முன்வந்து பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், ஐந்தாண்டிற்கு உட்பட்ட குடியிருப்புக்கான வாடகை ஒப்பந்தங்களில், தற்போது நடைமுறையிலுள்ள முத்திரைத்தாள் வரியினை 1 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதம் வரையில் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான பதிவுக் கட்டணங்களும் 1 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டு 5,000 ரூபாய்க்கு மிகாமல் வசூலிக்கப்படும். முத்திரைத் தாள் வரி மற்றும் பதிவுக் கட்டணங்களிலிருந்து வசூலிக்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை 14,435.09 கோடி ரூபாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், மாநில அரசின் சொந்த வரி வருவாய் மீதான மொத்த வரவினங்கள் 1,33,530.30 ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் வரியல்லாத வருவாய் வரவினங்கள் 15,898.81 ரூபாயாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

15–வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு குறைந்தபட்ச அளவில் 32,849.34 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய வரிகளின் நிதிப் பகிர்வுக்கு பிந்தைய வருவாய் பற்றாக்குறைக்கான மானியமாக, தமிழ்நாட்டிற்காக பரிந்துரைக்கப்பட்ட 4,025 கோடி ரூபாயை சேர்த்து மத்திய அரசிடமிருந்து மானியத் தொகை 37,096.69 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் 2,19,375.14 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-10

2020-2021 ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினங்கள் உள்ளபடியான நிலவர அடிப்படையில் 2,04,992.78 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டித் தொகை செலுத்துதல் மற்றும் திட்டம் சார்ந்த செலவினங்கள் அனைத்திற்கும் வரவு-செலவுத் திட்டத்தில் முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 21,617.64 கோடி ரூபாயாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்பொருட்டு, நிகரக் கடன் மற்றும் முன்பணங்கள் உட்பட ஒட்டுமொத்த மூலதன நிதியொதுக்கீடு 37,728.65 கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 2019-2020 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் 25.8 சதவீதம் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. பல்வேறு திட்டங்களுக்கான ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு, அதற்கான திட்டப் பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டும், நிதித் தேவைக்காக திட்டப் பணிகளில் தொய்வு ஏற்படாமல் நடைபெறுவதையும் உறுதி செய்வதற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு நிதிச் சிக்கல்கள் இருந்தபோதிலும், தமிழ்நாடு, நிதி நெறிகளை வழுவாமல் பின்பற்றி வந்துள்ளதுடன், நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பு, கடன் விகிதம் போன்ற நிதிநிலைக் குறியீடுகளை வரையறைக்குள் பராமரித்து வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்கில் மூலதன நிதி ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்ட போதிலும், ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை 59,346.29 கோடி ரூபாயாக மட்டுப்படுத்தப்பட்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.84 சதவீதமாக உள்ளது.

2020-2021 ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறைக்கு நிதி வழங்கும் வகையில், அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்த கடன் அளவான 62,757.80 கோடி ரூபாயில், நிகரக் கடன் தொகையாக 59,209.30 கோடி ரூபாய் திரட்டப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் நிலுவையிலுள்ள நிகரக் கடன் 4,56,660.99 கோடி ரூபாயாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 21.83 சதவீதமாக, 25 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிதிநிலை அறிக்கையின் இணைப்பாக இடைக்கால நிதி நிலவரத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.@ இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாகக் கருதி அவையில் படிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் அன்போடு மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். உதய் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன் மற்றும் நட்டங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டதன் காரணமாக மாநிலத்திற்கு நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை செயல்படுத்தியதன் விளைவாகவும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரி வருவாயில் ஏற்பட்ட தொய்வு போன்ற அனைத்தும், வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து வருவதற்கான காரணங்கள் ஆகும். மேலும், சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பான செலவினங்கள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன. வளர்ச்சி சார்ந்த செலவினத்திற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைக் கண்டறிவதற்கு, வளர்ச்சி சாராத செலவினத்தின் ஒட்டுமொத்த அளவை கட்டுப்படுத்துகின்ற வழிமுறைகளை ஆராய்வதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது.

திரு. எஸ். ஆதிசேஷய்யா, இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையிலான செலவின சீரமைப்புக் குழுவால் நேற்று மாண்புமிகு முதலமைச்சரிடம் அளிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்துவதன்மூலம், அரசுத் துறைகளின் செயல்திறனை கணிசமான அளவில் உயர்த்துவதற்கும், வளர்ச்சித் திட்டங்களுக்காக கூடுதல் நிதி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கும் உதவும் என நான் எதிர்பார்க்கிறேன். ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துதல், வரவு–செலவுத் திட்டத்தை நவீனப்படுத்துதல் மற்றும் நிதி இடர்ப்பாடுகளை நிருவகித்தல், துறைசார் வல்லுநர்களின் ஆலோசனை பெறுதல் மற்றும் அரசு அளவிலான தொடர் முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளின்மூலம் மாநிலத்தின் நிதிநிலைமை 2020–2021 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் நிருவகிக்கப்படும்.

உயரளவு வளர்ச்சியால் மட்டுமே, மாநில மக்களின் நலன் மேம்படும். இந்த வளர்ச்சியானது, ஏழை, எளியோர்,

---

@ 91 முதல் 103 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 பிப்ரவரி 14

நலிவுற்றோர் மற்றும் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியவர்கள் ஆகியோருக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் எப்பொழுதும் முழுக்கவனம் செலுத்தும்விதமாக, மாநில அரசிற்கு அதிக அளவில் நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு வழிவகுக்கும். புதிய முதலீடுகளை உத்வேகத்துடன் கொண்டுவருவது உட்பட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களால், துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதன் நற்பலன்களை அளிக்கக்கூடிய பொருளாதார சுழற்சி ஏற்படும். இதன்மூலம், அதிக வேலைவாய்ப்பு, உயர் வருவாய் கிடைக்கப்பெற்று மேலும் பல நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என நாங்கள் நம்புகிறோம்.

*பிற்பகல் 1-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமாயின், அதற்குத் தேவையான பொருள், தகுந்த கருவி, உகந்த காலம், மேற்கொள்ளப்போகும் செயல்முறை, பொருத்தமான இடம் ஆகிய ஐந்தையும், சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்து செயல்பட வேண்டும் என்கிறார் வள்ளுவப் பெருமான். வள்ளுவர் சொன்ன இந்த ஐந்தையும் திறமுடன் மேற்கொண்டு வெற்றி மேல் வெற்றி கண்ட, நமது மறைந்த முன்னாள் முதலமைச்சர் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் ஆறாவதாக அச்செயலை முடிக்க இயலாதவாறு செய்யப்படும் தடைகள், தாக்குதல்களை எதிர்கொண்டும், வேண்டுமென்றே கூறப்படும் குற்றம் குறைகள், தேவையற்ற விமர்சனங்களைப் புறந்தள்ளியும், மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாக எண்ணுகிற துணிவுள்ளம் கொண்டும் செயல்பட்டு, வெற்றி காண வேண்டும் என்று எங்களுக்கு வழிகாட்டி இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த தொலைநோக்குப் பார்வையும், மதிநுட்பம் மற்றும் பேரறிவு மிக்க வழிகாட்டுதல்களும்தான் இந்த அரசின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளன என்பதையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* அம்மா அவர்களின் ஆன்மா தொடர்ந்து எங்களையும், இவ்வரசினையும் வழிநடத்துகிறது என்பதையும் இத்தருணத்தில் நான் நன்றிப்

*பெருக்குடன் நினைவுகூர்ந்திட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் முழுமனதுடன் ஆதரவளித்து, சிறந்த ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இந்த நிதிநிலை அறிக்கையை வடிவமைத்து தயாரிப்பதில் உறுதுணையாக இருந்து, என்னுடன் ஓய்வின்றிப் பணியாற்றிய, நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அவருடன் திறம்படப் பணியாற்றிய நிதித் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் பொறுமையாக இருந்து என்னுடைய உரையைக் கேட்ட இந்தச் சட்டமன்றப் பேரவையினுடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (17-2-2020) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

--------

# இணைப்பு

*(87 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-ன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)-ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன், மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விகிதம் போன்ற நிதிநிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2020–2021 ஆம் ஆண்டுமுதல் 2022–2023 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்படுகிறது.*

### நோக்கங்கள்

*இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழ்க்கண்ட நிதி விதிமுறைகளைப் பின்பற்றி முற்போக்கான நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் தாங்கு தன்மைகள் போன்ற இலக்குகளை அடைவதற்கான வரையறைகளை வகுத்துள்ளது.*

- *நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 3 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும்.*
- *நிலுவைக் கடன் தொகை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும்.*

*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும். மேலும், வருவாய்ப் பற்றாக்குறையை படிப்படியாக குறைப்பதற்கான நிதி வழிவகைகளும் வகுக்கப்பட்டு வருவதால் பலன்தரும் சொத்துகள் உருவாக்கத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கும்.*

இதன் நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகள்:

- நிதி வளங்களை முன்னுரிமைப்படுத்துவதுடன், அதனைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.
- செலவினங்களை திறமையாக மேற்கொள்வதுடன், எதிர்பாரா செலவினங்களையும் கணக்கில் கொண்டும், வளர்ச்சியை உருவாக்கும் செலவினங்களில் சமரசம் செய்யாமலும், அதேசமயம் பொறுப்பேற்ற செலவினங்களுக்குமான நிதித் தேவைகளை எதிர்கொள்ளுதல்.
- கடன் தாங்குதன்மை வரையறைக்குட்பட்டு வரவுகளுக்கும், செலவுகளுக்கும் இடையில் சமநிலை இருக்குமாறு பராமரித்தல்.

## பொருளாதார நிலை

2019–2020 ஆம் ஆண்டில், இந்திய பொருளாதாரம் நிலையான விலையில் மதிப்பிடப்பட்டிருந்த 5 சதவீத வளர்ச்சி தற்போது தேக்க நிலையை எதிர்நோக்கியுள்ளது. இருப்பினும், இனிவரும் ஆண்டுகளில் இந்த தேக்க நிலை மறைந்து, போதுமான வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலையான விலையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடு 2019–2020 ஆம் ஆண்டிற்கு 7.27 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதார அதிர்வுகளை மாநில பொருளாதாரம் தாங்கக்கூடிய வகையில் உள்ளது. பன்முக பொருளாதாரம் மற்றும் நிலையான கொள்கை முயற்சிகளின் காரணமாக இந்த தாங்குதிறன் வளர்ந்துள்ளது. தற்போதைய ஆண்டு கணிப்புகளைக்காட்டிலும் எதிர்வரும் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியை அடைவோம் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநில மொத்த உள்நாட்டு மதிப்பீட்டின் வளர்ச்சியானது, பெயரளவில் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 12.0 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

## I. வருவாய்க் கணக்கு வரவுகள்

மத்திய அரசின் நிதி உதவி உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2019–2020 ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வரவினம் 1,91,860.88 கோடி ரூபாயாகும். இது 2020–2021 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 2,19,375.14 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

*2020 பிப்ரவரி 14]*

*இந்த மதிப்பீடுகள் 2021–2022 ஆம் ஆண்டில் 2,51,056.23 கோடி ரூபாயாகவும், 2022–2023 ஆம் ஆண்டில் 2,86,084.97 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இது 2021–2022 மற்றும் 2022–2023 ஆண்டுகளுக்கு முறையே 14.44 சதவீதம் மற்றும் 13.95 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:*

## 1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்

*மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,20,809.63 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2019–2020 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டினை ஒப்பிடும்போது 4,003.43 கோடி ரூபாய் குறைவாகும். 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,33,530.30 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2021–2022 ஆம் ஆண்டில் 1,52,270.66 கோடி ரூபாயாகவும், 2022–2023 ஆம் ஆண்டில் 1,73,664.49 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் மற்றும் அதன் தொடர்புடைய அனுமானங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:*

*பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் பொறுத்தமட்டில் 2015–2016 ஆம் ஆண்டில் இருந்த 14 சதவீத வளர்ச்சி, 2021–2022 ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என நம்பப்படுகிறது. மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய 2017–2018 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களுக்கிடையேயான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி 4,073 கோடி ரூபாய் நிலுவையாக இருப்பினும், பொருட்கள் மற்றும் சேவை வரி வசூலில் தமிழகம் ஓரளவு சிறப்பாக செயல்படுவதாலும், மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகைகள் உரிய நேரத்திற்குள் வரும் என எதிர்பார்க்கப்படுவதாலும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 46,195.55 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. 2021–2022 இல் விற்பனை வரி குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்கள் மீதான விற்பனை வரி வளர்ச்சி விகிதம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் உயரும் என எதிர்பார்க்கப்படுவதுடன், மது வகைகள் மீதான விற்பனை வரியும் சீராக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

வணிக வரியின் வளர்ச்சி விகிதம் தற்போதைய போக்கின் அடிப்படையில் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 14.5 இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மாநில ஆயத்தீர்வைகளில் 2019-2020 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டை காட்டிலும், 2020-2021 ஆம் ஆண்டில் 12 சதவீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன், தற்போதைய போக்கின் அடிப்படையில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இதே வளர்ச்சி விகிதத்தில் வளர்ச்சி அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2019-2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளிலும் அதேஅளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 14,435.09 கோடி ரூபாயாகவும், பொதுவான பொருளாதார வளச்சியின் அடிப்படையிலும், வரிவசூல் திறம்பட செய்யப்படுவதாலும் இதன் வளர்ச்சி வரும் ஆண்டுகளில் சுமார் 14.0 சதவீகிதமாக இருக்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

- 2019-2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட மோட்டார் வாகன வரிவருவாய், பொருளாதார தேக்க நிலையின் காரணமாக 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 6,018.63 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. மோட்டார் வாகன வரிவருவாய்முக்கியமாக வாகனங்களின் பதிவின்மீது விதிக்கப்படுவதால், வரும் ஆண்டுகளில் வரி வருவாய் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவும் பிற ஆதாரங்கள் பெருக்குவதை சார்ந்தும் அமையும். மின் வாகனங்கள் அதிகமாக பதியப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதன் தாக்கம் ஒரு காரணியாக கணக்கிடப்பட்டுள்ளது.

**வரி அல்லாத வருவாய்**

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 15,898.81 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2019-2020 ஆம்

*2020 பிப்ரவரி 14]*

*ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டினைக் காட்டிலும் 12.0 சதவீதம் வளர்ச்சியாகும். வருவாய் இனங்களை பெருக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், வரியல்லாத வருவாய் 2021–2022 ஆம் ஆண்டில் 17,806.78 கோடி ரூபாயாகவும், 2022–2023 ஆம் ஆண்டில் 19,943.59 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

**மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு**

*2020–2021 ஆம் ஆண்டு மத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டுகளின்படி 2019–2020 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 33,978.47 கோடியாக இருந்த மத்திய வரியின் மாநில அரசிற்கான பங்கு, 2019–2020 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 26,392.40 கோடி ரூபாயாக முன்னெப்போதும் இல்லாதவாறு குறைக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாடு மாபெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. பெருநிறுவனங்களுக்கான வரிவசூல் குறைவானதும் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டில் மிகையாக வழங்கப்பட்ட தொகையினை சரிகட்டியதுவுமே, இப்பெரும் பின்னடைவிற்கான காரணம். 14–வது நிதிக் குழுவின் பகிர்வு அளவுகோலின்படி ஏற்கெனவே பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டை மேலும் சுமைக்குள்ளாக்கியுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கான 15–வது நிதிக் குழுவின் பரிந்துரையில், மத்திய வரிகளில் மாநில அரசிற்கான நிதிப்பகிர்வை 42 சதவீதத்திலிருந்து 41 சதவீதமாக குறைத்துள்ள போதிலும், மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்தில் இருந்து 4.189 சதவீதமாக சிறிதளவு உயர்த்தியுள்ளது. 2021–2022 முதல் 2025–2026 வரையிலான காலத்திற்கான குழுவின் அறிக்கையில் தமிழ்நாடு போன்ற நிதி நிருவாகத்தில் சிறந்து விளங்கும் மாநிலங்களை ஊக்குவிக்கும் என்றும், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ள காரணத்தால், உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு கணக்கீட்டு முறையினை மறு ஆய்வு செய்யக் கோரும் தமிழ்நாட்டின் கோரிக்கையினை பரிசீலக்கும் என்று நம்பப்படுகிறது. வரும் காலங்களில் இந்தியப் பொருளாதார உண்மையான வளர்ச்சியில் நேர்மறை மாற்றம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசின் வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு 36,462.77 கோடி ரூபாயாகவும்,*

*2022–2023 ஆம் ஆண்டிற்கு 40,838.30 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

**மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

*2020–2021ஆம் ஆண்டின் மத்திய வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் தற்போதைய போக்குகளின் அடிப்படையில், 2020–2021 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 37,096.69 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் மத்திய அரசு நிலுவைத் தொகைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் முறையே 44,516.03 கோடி ரூபாய் மற்றும் 51,638.59 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய நிதிக் குழு பரிந்துரையின்படியான உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் போன்ற ஏனைய மத்திய அரசு மானியங்கள் மற்றும் தற்போது செயல்பாட்டிலுள்ள மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்பு திட்டங்களுக்காக பெறப்படவுள்ள மானியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.*

**II. வருவாய்க் கணக்கில் செலவுகள்**

*வருவாய்க் கணக்கு செலவுகள் 2019–2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2,12,035.93 கோடி ரூபாயைக்காட்டிலும், 2019–2020 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகள் 2,16,932.51 கோடி ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. அகவிலைப்படி உயர்வினாலும், இந்த ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்களாலும் இது உயர்ந்துள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2,40,992.78 கோடி ரூபாயாகும். வருவாய் கணக்கில் செலவினம் 2021–2022 ஆம் ஆண்டில்வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2,67,949.42 கோடி ரூபாய் எனவும், 2022–2023 இல் 2,97,055.44 கோடி ரூபாய் எனவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:*

- *பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 64,208.55 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.*

*2020 பிப்ரவரி 14]*

*2021–2022 ஆம் ஆண்டிற்கு 72,369.60 கோடி ரூபாயாகவும், 2022–2023 ஆம் ஆண்டிற்கு 81,415.80 கோடி ரூபாயாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில் தற்போதைய போக்கு மற்றும் பொருளாதார நிலையின் அடிப்படையிலும், வருங்காலங்களில் அகவிலைப்படி உயர்விற்கான சாத்தியங்களின் அடிப்படையிலும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

- *2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான செலவினம் 13,531.27 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. போக்குகளின் அடிப்படையிலும், வருங்காலப் பொருளாதார நிலவரப்படியும், 2021–2022 ஆம் ஆண்டிற்கு 15,425.65 கோடி ரூபாயாகவும், 2022–2023 ஆம் ஆண்டிற்கு 17,585.24 கோடி ரூபாயாகவும் முன்கணிப்பு செய்யப்பட்டுள்ளது.*

- *பொறுப்பேற்ற செலவுகளான, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு 2020–2021 ஆம் ஆண்டிற்கு 32,009.35 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், போக்குகளின் அடிப்படையிலும், மாநிலத்தின் ஓய்வூதியப் பொறுப்புகளின் அடிப்படையிலும் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 12.0 சதவீதமாக வளரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

- *நடப்பு ஆண்டில் செய்யப்பட்ட ஒப்பளிப்புகளான, பொங்கல் பரிசு, மாணக்கர்களுக்கான பேருந்து அனுமதிச் சீட்டு சலுகைக்கான கூடுதல் பொறுப்பு மற்றும் மின் மானியங்கள் ஆகிய காரணங்களால் மானியங்கள் மற்றும் உதவித் தொகைகளுக்கான 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டு வரவு–செலவு 2019–2020 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் 4,020.68 கோடி ரூபாய் உயர்ந்து 87,487.48 கோடி*

ரூபாயாக உள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 94,099.94 கோடி ரூபாயாகும். தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும், நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்களாலும், 2021–2022 ஆம் ஆண்டுக்கான செலவினம், 1,01,627.93 கோடி மதிப்பீட்டு ரூபாயாக உயர்ந்துள்ளது. நடைமுறையிலுள்ள திட்டச் செலவினங்களில், மின்சாரம் மற்றும் போக்குவரத்து துறை சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களின் பொறுப்புகளும் அடங்கும். அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு உதய் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மானியமான 4,563 கோடி ரூபாய், இந்நிறுவனத்தின் கடன்களுக்கான வட்டி செலுத்தும் வகையில் ஆண்டு ஒன்றுக்கு 1,779 கோடி ரூபாய் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு மட்டுமேயான 4,265.56 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் செலவினம் உட்பட, 2021–2022 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான நட்டங்களை அரசு ஏற்றுக்கொண்ட வகையிலும் அரசின் நிதிச் சுமை அதிகரித்துள்ளது. இதுபோன்ற எதிர்பாரா நிதிச் செலவினங்களும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தயாரித்து கணிக்கையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், மானியங்கள் மற்றும் நிதி உதவிகள் உள்ளிட்ட இனங்களின் மதிப்பீடு 2022–2023 இல் 1,08,741.89 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கு

பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்ல, மூலதன உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 31,220.89 கோடி ரூபாய் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 36,367.78 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 15.0 சதவீதமாக மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினம்

*2020 பிப்ரவரி 14]*

*மற்றும் நிகர கடன்களும் முன்பணங்களும் 2021–2022 ஆம் ஆண்டு 43,587.34 கோடி ரூபாயாகவும் 2022–2023 ஆம் ஆண்டு 55,109.96 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தை பராமரிக்கும் அதே வேலையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதி இதன்மூலம் தெரியவருகிறது*

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

*2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட தொகை 14,314.76 கோடி ரூபாயைவிட வருவாய் பற்றாக்குறை அதிகரித்து 2019–2020 திருத்த மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 25,071.63 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவினங்கள் 5,860.29 கோடி ரூபாயாக குறைந்து மொத்த வருவாய் செலவினங்கள் 4,896.58 கோடி ரூபாயாக உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். வருவாய்ப் பற்றாக்குறையை முறையாக குறைப்பதன்மூலம் வருவாய்ப் பற்றாக்குறை இல்லாத நிலையை அடைவதற்கும், தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி, நிதிநிலை மேம்பாடு மற்றும் கடன் தாங்குதன்மையை உறுதிசெய்யும் வகையிலும் இடைக்கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே சமன்நிலையை பேணுவதன்மூலம் இந்த நிலையை அடைய எண்ணப்பட்டுள்ளது. இதற்காக வருவாய் ஆதாரங்களை மேம்படுத்த தேவையான வழிமுறைகளை ஆராய முன்னுரிமை வழங்கப்படும். மேலும், வளர்ச்சிக்கான செலவினங்களுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்வது மற்றும் வருவாய் செலவினங்களை தரமாக பயன்படுத்தும் விதமாக பணியாளர்கள் சீர்தீருத்தக் குழு அமைப்பது போன்ற பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை வருவாய் செலவினங்களுக்காக மேற்கொண்டு செலவினங்களுக்குரிய தரத்தை மேம்படுத்த எண்ணப்பட்டுள்ளது. எனவே, 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 21,617.64 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை 2021–2022 ஆம் ஆண்டில் 16,893.19 கோடி ரூபாயாக குறையும். இது, 2022–2023 இல் 10,970.47 கோடி ரூபாயாக மேலும் குறையும். இது மூலதனச் செலவிற்கு அதிக இடம் தரும் வகையில் உள்ளது.*

[2020 பிப்ரவரி 14

- சில ஆண்டுகளாக பல்வேறு நிதி பிரச்சினைகள் இருப்பினும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில்* நிதிப் பற்றாக்குறை விகிதத்தை மூன்று சதவீதத்திற்குள்ளாகவே அரசு பராமரித்து வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் நல்ல வளர்ச்சிக்காக நிலையான நிதிக் கொள்கை மற்றும் பல முனை நிதி சேர்ப்பு நடவடிக்கைகளால் இது சாத்தியமாகும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 2.84 சதவீதம். இது நிதி வரையறையான 3 சதவீதத்திற்குள் இருக்கும். வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2021–2022 ஆம் ஆண்டில் 2.58 சதவீதம் மற்றும் 2022–2023 ஆம் ஆண்டில் 2.52 சதவீதமாக இருக்கும்.

## V. கடன்கள்

மத்திய அரசு நிர்ணயித்த ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2020–2021 ஆம் ஆண்டிற்கான, நிகரக் கடன் வரம்பு 62,757.80 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு 59,209.30 கோடி ரூபாய் மட்டுமே நிகரக் கடன் வாங்க திட்டமிட்டுள்ளது. நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 2020–2021 ஆம் ஆண்டில் 4,56,660.99 கோடி ரூபாயாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 21.83 சதவீதமாக இருக்கும். தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம் 2003–ன் நெறிமுறைக்கு உட்பட்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டின் சதவீதத்தில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 2021–2022 ஆம் ஆண்டில் 21.94 சதவீதமாகவும், 2022–2023 ஆம் ஆண்டில் 21.98 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடன் தாங்குதன்மை இருக்க வேண்டும் என்பது மாநில அரசின் நோக்கமாகும்.

---

* 2019–2020 ஆம் ஆண்டு மற்றும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான கணக்கீடுகளுக்கு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கான சமீபத்திய முன்மதிப்பீடு (தற்காலிகம்) பயன்படுத்தப்பட்டுள்ளது.

*2020 பிப்ரவரி 14]*

## VI. கடன் உத்தரவாதங்கள்

ஒவ்வோர் ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2019 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 29.85 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.62 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2019 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 5.46 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.47 சதவீதமாகவும் உள்ளது.

### முடிவுரை

தற்போது பொருளாதார மந்தநிலை நிலவினாலும், வரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார மந்த நிலையிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடும்போது, தமிழகம் உயர் பொருளாதார வளர்ச்சியை பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வள ஆதாரங்களை கூட்டுதல் மற்றும் திறன்மிக்க வரிவசூல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் மொத்த வருவாயை வலுவான நிலையில் பராமரிக்க இயலும்.

வளர்ச்சிக்கான செலவினங்களின்மீது முதலீடு செய்யும் அதே வேளையில், நிதி சேர்ப்பு நடவடிக்கையை அடிப்படை கொள்கையாக கொண்டு, கடன் நிலைத்தன்மை மற்றும் வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையேயான நிதி சமநிலையை உறுதி செய்வதன்மூலம், தமிழ்நாடு நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறைகளின்படி வருவாய் பற்றாக்குறையை வரும் காலங்களில் குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

--------

# அட்டவணை – இடைப்பட்ட

| பிப்ரவரி – 2020 | 2018-2019 Projection | 2018-2019 Accounts | 2019 Proj |
|---|---|---|---|
| **வருவாய்** | **1,81,322.91** | **1,73,741.16** | **1,97,** |
| **மாநிலத்தின் சொந்த வருவாய்** | **1,28,033.85** | **119,734.18** | **1,37,** |
| வரி | 114,730.41 | 105,534.16 | 126, |
| வரி அல்லாதவை | 13,303.44 | 14,200.02 | 11, |
| **மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை** | **53,289.06** | **54,006.98** | **59,** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 31,035.13 | 30,638.77 | 36, |
| உதவி மானியம் | 22,253.93 | 23,368.21 | 22, |
| **மூலதன வரவுகள்** | | | |
| **வட்டியல்லாத செலவு** | **204,499.30** | **191,718.29** | **210,** |
| **சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட)** | 60,964.78 | 52,535.26 | 57, |
| **ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும்** | 27,649.09 | 27,205.83 | 27, |
| **ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும்** | 10,273.61 | 10,182.99 | 11, |
| **உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும்** | 77,335.77 | 77,894.79 | 81, |
| **ஏனைய வருவாய்ச் செலவினங்கள்** | 24.68 | 23.97 | |
| **மூலதன ஒதுக்கீடு** | 30,028.39 | 24,310.84 | 32, |
| **நிகரக் கடன் வழங்கல்** | -1777.03 | -435.39 | -1 |
| **நிதிக் குறியீடுகள்** | | | |
| **முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–)** | **-23,176.39** | **-17,977.13** | **-13,** |
| **வட்டி செலுத்துதல்** | 30,409.81 | 29,357.76 | 35, |
| **மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை** | 16.77% | 16.90% | |
| **வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)** | **-25334.85** | **-23,459.44** | **-17** |
| **மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)%** | -13.97% | -13.50% | |
| **நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)%** | 47.28% | 49.56% | |
| **நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)** | **-53,586.20** | **-47,334.89** | **-48** |
| **மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)** | -3.17% | -2.84% | |
| **மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)** | **16,89,459.00** | **16,64,159.33** | **17,63** |

*2020 பிப்ரவரி 14]*

## கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்)

| -2020 ection | 2019-2020 Revised Estimates | 2020-2021 Projection | 2020-2021 Budget Estimates | 2021-2022 Projection | 2022-2023 Projection |
|---|---|---|---|---|---|
| **117.11** | **1,91,860.88** | **2,19,438.51** | **2,19,375.14** | **2,51,056.23** | **2,86,084.97** |
| **964.40** | **135,004.91** | **1,55,179.31** | **1,49,429.11** | **1,70,077.44** | **1,93,608.08** |
| 098.24 | 120,809.63 | 141,186.05 | 133,530.30 | 152,270.66 | 173,664.49 |
| 866.16 | 14,195.28 | 13,993.26 | 15,898.81 | 17,806.78 | 19,943.59 |
| **152.71** | **56,855.97** | **64,259.20** | **69,946.03** | **80,978.80** | **92,476.89** |
| 463.15 | 26,392.40 | 37,376.32 | 32,849.34 | 36,462.77 | 40,838.30 |
| 689.56 | 30,463.57 | 26,882.88 | 37,096.69 | 44,516.03 | 51,638.59 |
| **420.78** | **214,549.96** | **226,685.94** | **2,41,601.11** | **268,886.29** | **3,03,032.04** |
| 649.15 | 56,967.82 | 60,385.72 | 64,208.55 | 72,369.60 | 81,415.80 |
| 936.46 | 28,236.04 | 31,997.28 | 32,009.35 | 35,850.47 | 40,152.52 |
| 596.51 | 11,840.58 | 11,637.59 | 13,531.27 | 15,425.65 | 17,585.24 |
| 780.58 | 87,487.48 | 87,220.35 | 94,099.94 | 101,627.93 | 108,741.89 |
| 25.52 | 31.27 | 27.66 | 23.35 | 24.52 | 25.75 |
| 525.17 | 31,220.89 | 36,876.43 | 36,367.78 | 41,822.95 | 48,096.39 |
| 092.61 | -1234.12 | -1459.09 | 1360.87 | 1765.17 | 7014.47 |
| **303.67** | **-22,689.08** | **-7,247.43** | **-22,225.97** | **-17,830.06** | **-16,947.07** |
| 332.61 | 32,369.31 | 38,210.22 | 37,120.33 | 42,651.26 | 49,134.25 |
| 17.92% | 16.87% | 17.41% | 16.92% | 16.99% | 17.17% |
| **203.72** | **-25071.63** | **-10040.31** | **-21617.64** | **-16893.19** | **-10970.47** |
| -8.73% | -13.07% | -4.58% | -9.85% | -6.73% | -3.83% |
| 35.37% | 45.54% | 22.09% | 36.43% | 27.93% | 16.60% |
| **,636.28** | **-55,058.39** | **-45,457.65** | **-59,346.29** | **-60,481.31** | **-66,081.32** |
| -2.76% | -2.97% | -2.39% | -2.84% | -2.58% | -2.52% |
| **,062.00** | **18,54,951.77** | **18,99,305.93** | **20,91,926.60** | **23,42,957.79** | **26,24,112.73** |